
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

19-1-1975

50 காசு




வாழ்க்கையில் அதிர்ஷ்டமுள்ள ஆடவர் ஒருவரை மீண்டும் சந்திக்கும்போது...
...அவர் அணிந்துள்ள ஆடைகளின் அழகையும் பாருங்கள்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!

கோகுலம்

மலர் 3 □ இதழ் 21

ஜனவரி 19, 1975

ஆனந்த, தை 6

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்
-- பாரதியார்

சந்தா விவரம் :

உள்நாடு:

ஒரு வருடம் ரூ. 13-00

ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

ஸெயிண்ட் பாஸில் கதீட்ரல்

ரஷ்யாவை அரசாண்ட மன்னர்களுக்கு ஜார் (Czar) என்று பெயர். இவர்களில் நான்காவது இவான் என்ற மன்னருக்குப் 'பயங்கரமான இவான்' என்று ஒரு பெயரும் உண்டு. இவர் காலத்தில் 1553க்கும் 1560க்கும் இடையே போக்ரோவ்ஸ்கி (Pokrovski) அல்லது ஸெயிண்ட் பாஸில் மாதா கோயில் கட்டப்பட்டது. வாஸிலி ப்ளாஷெனுய் மாதா கோயில் என்று பின்னால் புகழ்பெற்றது இது - மாஸ்கோவின் புனித பிச்சைக்காரரான (Holy Beggar) வாஸிலி (Vasily) என்பவரின் நினைவாக. இவரது புனித உடல் இந்த மாதா கோயிலின் கீழே, புதைக்கப்பட்டுள்ளது.

மாதாக் கோயில்களிலேயே அதிசயிக்கத்தக்கதாகவும், விநோதமானதும் கோமாளித்தனத்தோடு கூடியதுமான ஒன்று இதுதான். புகழ்பெற்ற மாஸ்கோவின் செஞ் சதுக்கத்தில் கிரெம்ளின் மாளிகைச் சுவர்களை அடுத்து இந்த விந்தை மாதாக் கோயில் இருக்கிறது. 1552ல் கஸான் வெற்றியின் நினைவாக இவான் மன்னர் இந்தக் கதீட்ரலைக் கட்டினார். ரஷ்யக் கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது இந்தக் கதீட்ரல். விநோதமான பெரிய வெங்காயங்களைப் போன்ற கோபுரங்களைக் கொண்டது இது. ஒவ்வொரு கோபுரமும் விதம் விதமான வண்ணங்களினால் அழகுபடுத்தப்பட்டிருக்கும். கீழை நாட்டு மன்னர்களின் தலைப் பாகை (டர்பன்)களைப் போலவும், பறங்கிக்காய், பைன் ஆப்பிள் இப்படிப் பல்வேறு வகையான அமைப்புக்களில் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிக் குண்டு வெங்காயம் போல் கூம்பிய எட்டுக் கோபுரங்களும், தாவரங்களை நினைவு படுத்தும் பதினொரு கூரான கோபுரங்களும் இந்தக் கதீட்ரலில் உள்ளன. கதீட்ரலின் வெளிப் பக்கத்தை நீலம், பச்சை, தங்க நிறம், ஆரஞ்சு, சிவப்பு, ஊதா, மஞ்சள், வெள்ளி வண்ணம் ஆகிய நிறங்கள் அழகுபடுத்துகின்றன. இதைக் கட்டியவர்கள் முக்கியமாக ரஷ்யக் கட்டடக் கலைஞர்கள் தான். ஆனால் ஒரே ஒரு இத்தாலியக் கலைஞன் இருந்தானாம். அவன் கண்களைக் குருடாக்கி விட்டாராம் மன்னர் இவான்; இதே மாதிரி இன்னொரு அழகிய கதீட்ரலை வேறு எங்கும் கட்டிவிடக் கூடாது என்பதற்காக.

1923ல் கம்யூனிஸ அரசாங்கம் இதை மதச்சார்பற்ற இடமாக்கி, பொருட்காட்சிச் சாலையாக அறிவித்தது. வெளிப்புறத்தில் விதம் விதமான வண்ணங்களால் இது பளீரென்று விளங்குவதற்கு நேர் மாறான காட்சியைக் கொண்டது இதன் உட்புறம். இருண்டும், சோகம் கப்பியதாகவும் காணப்படுகிறது. மங்கலான ஏக்கம்நிரம்பியமூலைகளையும் தாழ்வான நுழைவாயில்களையும், சிறிய கதவுகளையும் கொண்டதாக மொத்தத்தில் இந்தக் கதீட்ரலின் உள் பக்கம் மர்மங்கள் நிறைந்த குகையைப் போலக் காட்சி அளிக்கும்.





நாக குமாரன்

• ரஞ்சித் குமார் •

ரொம்ப ரொம்ப நாட்களுக்கு முன்னால் சோனிபுரி என்று ஒரு சிறு நாடு இருந்தது. சோனிபுரி ராஜா பெயருக்கேற்ப மகா சோனி. எழுந்து நடந்தாலே மூச்சு வாங்கும் என்றாலே பார்த்துக் கொள்ளுங்களேன்! ராஜ்ய நிர்வாகம் முழுதும் கவனிப்பது ராணிதான்.

ராணி நன்றாக ஆட்சி செய்தால் போதுமா! அவளுக்கப்புறம் நாட்டை யார் பரிபாலிப்பது? மக்களுக்கு இதே கவலைதான். ஆம். மகா அழகியும் புத்திசாலியுமான ராணிக்குக் குழந்தையே கிடையாது.

ராணிக்கும் இதே கவலைதான்.

ஒரு நாள் மாலை நேரம். கவலையுடன் நதிக் கரையோரமாக உலவிக் கொண்டிருந்தாள் ராணி. 'க்ளப்' என்ற ஓசையுடன் நீருக்குள்ளிருந்து குதித்து வெளியே வந்தது ஒரு பெரிய தவளை.

வியப்புடன் அதையே வேடிக்கை பார்த்தாள் ராணி. அடுத்த விநாடியே இன்னும் ஆச்சரியம் அதிகமாயிற்று. ஏனெனில் தவளை தன் பெரிய கண்களை ஓர் உருட்டு உருட்டி அவளை உற்று நோக்கியது. "என்ன ராணி! ரொம்பக் கவலையாயிருக்கிறாயே?" என்று கேட்டது.

ஒரு விநாடி திகைத்த ராணி பிறகு தன் குறையைத் தெளிவாகச் சொன்னாள் அதனிடம்.

"இவ்வளவுதானே? நான் வழி சொல்கிறேன்" என்றது தவளை.

பிறகு "என் காலில் ஒரு முள் குத்தியிருக்கிறது. முதலில் அதை எடுத்துவிடு" என்றது அந்த மண்டூகம்.

தொடவே அருவருப்பான அதன் கால்களைப் பிடித்துத் தூக்கினாள் ராணி. விரல்களுக்கிடையே தோலைக் குத்தி நின்ற சிறு முள்ளைக் கிள்ளி எறிந்தாள்.

திடீரென்று காற்றடித்தது. கண்ணில் தூசி விழுந்தது. கண்ணைக் கசக்கினாள் ராணி. மீண்டும் கண் திறந்தபோது எதிரே ஒரு கிழவி நின்றிருந்தாள்.

"எங்கே அந்தத் தவளை?" என்று தேடிய ராணியிடம் கூறினாள் கிழவி. "அந்தத் தவளை நான்தான் ராணி. நான் ஒரு தேவதை. பணிவு மிக்கவர்களுக்கு எப்போதும் உதவுவதே எனது தொழில். நான் சொல்கிறபடி செய். உனக்குப் புத்திரப் பேறு கிடைக்கும்" என்றாள். பிறகு அவளிடம் இரு மலர்களைக் கொடுத்து "இருட்டும் நேரத்தில் ஒரு பாத்திரத்தில் நல்ல மணமுள்ள பசும் பாலைக் காய்ச்சு. அதில் இந்த இரு பூக்களையும் போட்டு நன்றாகக் காய்ந்ததும் அதில் மூன்று சொட்டுத் தேனை விட்டுக் குலுக்கிப் பிறகு உன் அரண்மனைத் தோட்டத்தில் சிறு பள்ளம் தோண்டி அதில் பால் கீழே கொட்டாதபடி அப்படியே கிண்ணத்தோடு கவிழ்த்து வை. மறுநாள் கிண்ணத்தினடியில் இரு பழங்கள் தோன்றியிருக்கும். அதில் எது விருப்பமோ அதைச் சாப்பிடு. ஆனால் ஜாக்கிரதை. ஏதேனும் ஒன்றை மட்டும்தான் உண்ண வேண்டும். இரண்டையும் சாப்பிட்டால் ஆபத்து" என்று எச்சரித்துவிட்டு நதியில் இறங்கி மறைந்தாள் கிழவி.

வேகம் வேகமாக அரண்மனைக்கு வந்தாள் ராணி. இருட்டத் தொடங்கவே பரபரப்புடன் நல்ல பாலைக் காய்ச்சினாள். பாலில் கிழவி கொடுத்த பூக்களைப் போட்டாள்.

தேனை விட்டாள். அவள் சொன்ன படியே தோட்டத்தில் பள்ளம் பறித்து அப்பள்ளத்தில் பால் கொட்டி விடாத படி கிண்ணத்தைக் கவிழ்த்துவைத்தாள்.

மறுநாள் கிழக்கு வெளுக்கும் நேரத்துக்கு ஓடினாள் தோட்டத்துக்கு. கிண்ணத்தைத் தூக்கியதுமே அடியில் இரு பழங்கள் இருந்தன.

சிவப்புப் பழத்தை எடுத்தாள் ராணி. கடித்துச் சுவைத்தாள்.! அப்பப்பா... தேன், கற்கண்டு, பால் எல்லாம் ஒன்று சேர்ந்தால்கூட அவ்வளவு ருசி இருக்காது. அவ்வளவு சுவை! என்ன செய்கிறோம் என்றே தெரியாமல் பரபரப்புடன் இரண்டாவது பழத்தையுமே தின்று விட்டாள் ராணி. தின்ற பிறகுதான் நினைவு வந்தது.


''அடடா! கிழவி ஒன்றைத்தானே தின்னச் சொன்னாள்? நாம் இரண்டையும் தின்றுவிட்டோமே. பரவாயில்லை. ஒருவேளை இரண்டு குழந்தைகள் பிறக்குமோ என்னவோ?'' என்று சமாதானம் செய்து கொண்டாள் ராணி. அவள் எண்ணம் மெய்யாகியது.

ராணி கருவுற்றாள். அவள் பெற்ற பிள்ளையை அவளிடம் காட்டியதுமே அதிர்ச்சியால் ''வீல்'' என்று அலறினாள் ராணி. ஏன் தெரியுமா? அது ஒரு கன்னங் கரேலென்ற மலைப் பாம்பு. அதைத் தூக்கிக் கொண்டு போய் எறியச் சொன்னாள். அதன்படியே தாதியால் வெளியே எறியப்பட்ட அப்பாம்பு சிறிது நேரத்தில் சரசரவென்று ஊர்ந்து சென்று ஊரின் வெளியே ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரப் பொந்தில் குடியேறியது. சிறிது காலத்தில் அதன் கரு நிறம் பழுப்பாக மாறி, பின் சிவப்பாக மாறிவிட்டது. நாளாக ஆக அதன் உடல் மனித உடலாக மாறினாலும் தோற்றத்தில் பாம்பு போலவே இருந்தான் அவன்.

மறு வருடம் கருக்கொண்டு வேறு ஒரு குழந்தையைப் பெறுவதற்குத் தயாரானாள் ராணி. இது எப்படிப் பிறக்கப் போகிறதோ என்ற அச்சம் அவளை ஆட்டிப் படைத்தது. ஆனால் பிறந்த குழந்தையோ கொள்ளை அழகாக இருந்தது. ராணிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. குழந்தைக்குச் சந்திரகாந்தன் என்று பெயரிட்டாள்.

இளவரசன் சந்திரகாந்தன் நாளொரு குறும்பும் பொழுதொரு வேடிக்கையுமாக வளர்ந்தான். கொஞ்ச நாளில் அவன் வீரம் நாடெல்லாம் பரவிவிட்டது. இளவரசனுக்கு இருபது வயது முடிந்ததுமே ராணி அவனை அழைத்தாள்.

''சந்திரகாந்த்! உனக்கு வயது வந்து விட்டது. நமது குல வழக்கப்படி வேற்று நாடு சென்று நீ விரும்பும்



பெண்ணொருத்தியை மனைவியாக்கிக் கொண்டு வா'' என்றாள்.

தாயின் ஆணைப்படி குதிரை மீதேறித் தேச சஞ்சாரம் கிளம்பினான். நாட்டை அடுத்த கானகத்துக்குள் சென்றதும், ''நில்லு தம்பி!'' என்ற குரல் கேட்டது. திடீரென ஒலித்த குரல் கேட்டுத் திகைத்துப் போனான் சந்திரகாந்த். குரலுக்கு உரிய உருவத்தைக் கண்டதும் திகைத்துப் போனான் என்று அறிந்த அந்தப் பாம்பு மனிதன் பேசினான்.

''தம்பீ! எங்கே போகிறாய்?''

''எனக்கு ஏற்ற மனைவியைத் தேடி. அது சரி. நீ யார்?'' என்று கேட்டான் இளவரசன்.

''அதுதான் சொன்னேனே, 'தம்பி' என்று. நீ என் தம்பி'' என்றான் அவன்.

''எனக்கு அண்ணனே கிடையாது. அதிலும் பாம்பு வடிவத்திலா? தவிர நீ என் அண்ணனானால் ஏன் இங்கே இருக்கிறாய்?''

''உன் அம்மாதான் என்னை வேண்டாம் என்று எறிந்துவிட்டாள் தம்பி, அண்ணன் நான் இருக்க, தம்பியாகிய உனக்குத் திருமணமாகலாமா? போ, போய் எனக்கு ஒரு பெண்ணைப் பார்க்கும்படி சொல் உன் அம்மாவிடம்'' என்றான் பாம்பு மனிதன்.

சோர்ந்து போய்த் திரும்பி வரும் மகனைக் கண்டு பயந்துபோன ராணி என்னவென்று விசாரித்தாள்.

பாம்பு அண்ணனைப் பற்றிச் சந்திரகாந்த் சொன்னதும் அவளுக்குத் திகைப்பாகிவிட்டது. அவனது கோரிக்கையோ அவளைத் திக்குமுக்காட வைத்தது. பாம்புக்கு யார் பெண் கொடுப்பார்கள்?

''சந்திரா! நீ வேறு பக்கமாகச் சென்று உன் மனைவியைத் தேடு'' என்றாள் ராணி. ''மன்னிக்க வேண்டும்'' என்ற குரலுடன் குறுக்கிட்டார் அரண்மனை நிமித்திகர்.

''அண்ணனை விடுத்துத் தம்பிக்கு மணம் செய்தால் கண்டம் இருக்கிறது இளவரசருக்கு.''

பயந்து விட்டாள் ராணி. கிழவி சொன்னதைக் கேளாமல் இரண்டு பழங்களையும் சாப்பிட்டுப் படும் அவஸ்தை போதும். நிமித்திகர் சொல்வதையும் மறுக்க வேண்டாம் என்று எண்ணினாள். 'என் மகனுக்குப் பெண் கொடுங்கள்' என்று ஓலை அனுப்பி மணமகனைக் காட்டாமல் எந்த ராஜாவுடைய பெண்ணையாவது மணமுடித்து விடலாம்' என்று திட்டமிட்டாள். அப்படியே ஓர் இளவரசியையும் தேடிவிட்டாள்.

'திருமண நேரம் வரை மணமகனை மணப் பெண் காண முடியாது. இது எங்கள் குல வழக்கம்' என்றாள் ராணி.

அதன்படி ஓர் அரசர் தம் மகளைத் தர முன்வந்தார். திருமண நேரத்தில் மணமேடையில் உட்கார்ந்திருக்கும் பாம்பு மனிதனைக் கண்டு திடுக்கிட்டார்கள் பெண் வீட்டார். ஆனால் நிச்சயமான திருமணத்தை நிறுத்துவது கூடாது. தம் மகளின் தலைவிதி அது என்றெண்ணி ஊர் போய்ச் சேர்ந்தார் அந்த அரசர்.

அன்றிரவு மணவறைக்குள் சென்ற பாம்பு ராஜா — அவனை இனி பாம்பு ராஜா என்றே கூப்பிடுவோம். — விடிந்து வெகு நேரமாகியும் வரவில்லை. கதவைப் படபடவென்று தட்டியதும் கதவைத் திறந்து கொண்டு தலையை நீட்டியபோது அவன் வாயிலிருந்து ரத்தம் கொட்டியது. பிறகு வெகு வேகமாக வெளியேறித் தன் இருப்பிடமான காட்டுக்குப் போய் விட்டான். மணவறைக்குள் இளவரசியின் உடைகள் தவிர வேறெதுவும் காணவில்லை.

இப்படியே இரண்டு மூன்று இளவரசிகள் பலியான பிறகு இந்த ரகசியம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. யாரும் பெண் கொடுக்க முன்வரவில்லை. கடைசியாக வறுமை தாண்டவமாடும் ஒரு குடும்பத்தினர் தம் பெண்ணைத் தர முன்வந்தனர். பணம் பத்தும் செய்யும் என்று சும்மாவா சொன்னார்கள்?

பாவம்! குடும்பத்துக்கு மூத்த பெண். அவள் பெயர் மோகனா. அவள் விருப்பத்தை யாரும் லட்சியம் செய்யவில்லை.

நதிக்கரையோரம் சோகமாக நடந்து கொண்டிருந்தாள் மோகனா. 'க்ளப்', 'க்ளப்' என்ற ஒலியுடன் ஒரு தவளை கரையேறியதையோ மறு கணமே அது ஒரு கிழவியாக மாறியதையோ அவள் காணவில்லை.

''வா, குழந்தாய்! உனக்கு என்ன கவலை?'' என்றாள் கிழவி.

''என் கவலை உங்களுக்குத் தெரிந்து பயன் என்ன பாட்டி?'' என்றாள் மோகனா அழுதுகொண்டே.

''பயப்படாதே. பெண்கள் கவலைப் படுவது எனக்குப் பிடிக்காது. நான் சொல்கிறபடி நீ செய்தால் அந்தப் பாம்புக் கணவன் வாயிலிருந்து நீ தப்புவதுமட்டுமல்ல, அவனோடு சந்தோஷமாக வாழ்வும் செய்யலாம்'' என்றாள் கிழவி.

''என்ன சொன்னாலும் செய்கிறேன் பாட்டி'' என்றாள் மோகனா.

கிழவி சொன்னாள்; ''திருமண இரவில் உன் அறைக்குள் அந்தப் பாம்பு இளவரசன் வந்ததும் 'அந்தப் பட்டுப் புடவைகள் எனக்குப் பிடிக்கவில்லை. கழற்றி எறி' என்பான். நீ பட்டா



யார் பிறருடன் அதிகமாகச் சண்டை சச்சரவுகள் செய்கிறார்களோ அவர்கள் தாம் அதிகமாகக் கடவுளுடைய கோபத்துக்கு ஆளாகிறார்கள்.

—நபிகள் நாயகம்

நீ பாவத்தை வெறுக்கலாம். ஆனால் பாவம் செய்தவனை வெறுக்காதே. அவனைத் திருத்திக் கைதூக்கி விட முயற்சி செய்.

—ராமதீர்த்தர்

டையைக் களைந்ததும் உன்னைக் கடித்து மென்று பட்சணம் பண்ணி விடுவான். அதனால்...'' என்ற பாட்டி அவள் காதில் ஏதோ கிசுகிசுத்தாள்.

''சரி பாட்டி!'' என்று ஓடினாள் அரண்மனையை நோக்கி.

கல்யாணம் நடந்த அன்றிரவு மோகனா ஒன்றன் மேல் ஒன்றாக எட்டு உடைகளை அணிந்து கொண்டாள். அறையில் பால் கிண்ணமும் எண்ணெய்க் கிண்ணமும் வைத்தாள்.

அறைக்குள் நுழைந்த பாம்பு மோகனாவைப் பார்த்து, ''எதற்காகப் பட்டாடை அணிந்து கொண்டிருக்கிறாய்? கழற்று'' என்றது.

''ஆகட்டும். நீங்களும் உங்கள் மேல் தோலை உரியுங்கள்'' என்றாளே பார்க்கலாம் மோகனா!

''என்னிடம் இவ்வளவு துணிவாக யாரும் பேசியதில்லை'' என்றான் பாம்பரசன்.

''அதற்காக நான் பேசக் கூடாதா? ஏன், என்னிடமும்தான் இப்படி இதுவரை யாரும் பேசியதில்லை.''

கடைசியில் வேறு வழியின்றித் தன் மேல் தோலை உரித்தான் பாம்பரசன். மோகனாவும் தன் முதல் ஆடையைக் கழற்றினாள். அவள் உடலில் அடுத்த ஆடையைப் பார்த்த அவன் ''அதையும் கழற்று'' என்றான்.

''நீங்களும் உங்கள் அடுத்த தோலை உரியுங்கள்'' என்றாள் அவள்.

இப்படியே ஏழு ஆடைகளை மோகனா கழற்றி எறியவும் பாம்புராஜாவும் ஏழு முறை தோல் உரித்தான். இப்போது அவன் உடல் மிகவும் மெலிந்து நகரவும் முடியாத நிலையில் பலவீனமாகி விட்டான்.


உடனே அருகில் தயாராக வைத்திருந்த ஒரு தோல் பட்டையை எடுத்துக் கொண்டாள். அதைக் கொதிக்கும் எண்ணெயில் தோய்த்துச் சடார், சடாரென்று பாம்பு ராஜாவை அடித்து நொறுக்க ஆரம்பித்தாள். இடப்புறமாகவும் வலப்புறமாகவும் மாற்றி மாற்றி அடித்தாள். நினைவு மயங்கிய அந்தப் பாம்பு மனிதனை எடுத்து எண்ணெயில் முக்கிப் பிறகு அப்படியே தேன் கிண்ணத்தில் முக்காட்டினாள். பின்பு பால் கிண்ணத்தை எடுத்து அவன் வாயில் ஊட்டிவிட்டு உடலை நன்றாகத் துடைத்து அதைக் கட்டிலில் போட்டாள். தானும் அவன் அருகே படுத்து உறங்கிப் போனாள்.

அவள் தூங்காமல் திரும்பிப் பார்த்திருந்தால் அப்படியே வியப்பில் மூர்ச்சையாகியிருப்பாள். ஆம், மெல்ல, மெல்ல அந்தப் பாம்பு இளவரசன் அழகிய மனித உருவமாக மாறிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் அவனது சௌந்தர்ய வடிவம் கண்டு அவள் சொக்கிப் போனாள்.

இளவரசன் மனித உரு அடைந்ததற்காக ராணி, தம்பி சந்திரகாந்த், ஏழைப் பெண் மோகனா இவர்களில் அதிக மகிழ்வு கொண்டது யார் என்று கூறவே முடியாது.

பிறகென்ன, அண்ணனும் தம்பியும் சேர்ந்த பின்பு சோனிபுரி சொர்க்கபுரியாகவல்லவோ மாறிவிட்டது!



பாரத தேசத்தின் பொற்காலம் என்று புகழப்படும் ஒரு சகாப்தத்தை உருவாக்கிய ஒரு மன்னன் இளமையில் அநாதையாக ஆதரிப்பாரின்றிப் பசியும் பட்டினியுமாகச் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்தார். அவர் தாயின் வயிற்றிலிருக்கும்போதே தந்தையை இழந்த துர்ப்பாக்கியசாலி. தந்தை எப்படிப்பட்டவர்? புத்த பகவானின் சாக்கிய வமிசத்து க்ஷத்திரியர்களின் ஒரு கிளையில் வந்தவர். இப்படிப் பிறக்கும்போதே தந்தையை இழந்த ஒரு குழந்தைதான் பிற்காலத்தில் பாரத சாம்ராஜ்யத்துக்கு அடிகோலிய புகழ் பெற்ற சக்கரவர்த்தியாக விளங்கியது. அவர் யார் என்று இன்னும் புரியவில்லையல்லவா? **சந்திர குப்த மௌரியர்தான்** இந்த ஒப்பற்ற அரசர். 'மோரி' என்ற க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவராதலால் இவருக்கு மௌரியர் என்ற பட்டப் பெயர் வந்தது.

அநாதையாகிவிட்ட சந்திர குப்தரின் தாயை அவரது மாமா பாடலிபுரத்துக்கு அழைத்து வந்தார். அங்கு வந்த பிறகுதான் சந்திரகுப்தர் பிறந்தார். தான் வாழவே முடியாத நிலையில் குழந்தையை வளர்க்க முடியாமல் தவித்தாள் தாய். இதைக் கண்ட அவர் சகோதரர் ''சகோதரி, உன் குழந்தையை வசதியாக வாழும் ஒரு தனவந்தரின் வீட்டில் கொண்டு போய் அவர்களுக்குத் தெரியாமல் வைத்து விட்டு வந்துவிடு. இந்த அழகிய குழந்தையை யாரும் வளர்க்கத் தயங்க மாட்டார்கள். இதனால் குழந்தையும் நல்ல இடத்தில் பசியின்றி வளரும். உன் பாரமும் குறையும்'' என்று யோசனை கூறினார்.

சகோதரரின் யோசனைப்படியே சந்திர குப்தரின் அன்னை தன் குழந்தையை ஒரு பசுமாட்டுக் கொட்டிலில் விட்டு வந்தாள். பசுக்களின் சொந்தக்காரன் நல்லவன். தன் கொட்டிலில் கிடக்கும் குழந்தையை மகிழ்ச்சியோடு வீட்டுக்குக் கொண்டு போய் வளர்க்கலானான். இப்படி வளர்ந்து சற்றுப் பெரியவனானதும் அந்த இடையன் குழந்தைச் சந்திர குப்தனை ஒரு வேடனுக்கு விற்றுவிட்டான். அந்த வேடனோ தன் கால்நடைகளை மேய்த்து வரும்படி சிறுவன் சந்திர குப்தனை நியமித்தான்.

எங்கிருந்தால் என்ன? மாணிக்கம், மாணிக்கம் தானே? கால்நடைகளை மேய்க்கும் தொழிலானாலும் அதிலும் அவன் தலைமை தாங்கித் தனித் தன்

மையோடு விளங்கினுன். ஊருக்கு வெளியே மற்ற பையன்களுடன் விளையாடும்போது இவன் மன்னனுகவும் மற்ற பையன்களைக் குடிபடைகளாகவும் பாவித்துக் கொண்டு விளையாடுவார்கள். ராஜா விளையாட்டு. விளையாட்டுக்காக அரச வேஷம் ஏற்று, அரியணை என்று மண் மேட்டில் அமர்ந்து சபை கூட்டி, குறை கேட்டு, நியாயம் வழங்கிய மாடு மேய்த்த சிறுவன், உண்மையிலேயே இந்தியாவை ஒரு குடைக் கீழ் ஆளும் சக்கரவர்த்தியாக விளங்கப் போகிருன் என்பதை அவன் தோழர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனுல் அதிர்ஷ்ட தேவதையின் முடிவு அதுவாகத்தான் இருந்தது.

ஒரு நாள் இவர்கள் இப்படி — மன்னன் குடிபடைகள் — விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தபோது அவ்வழியாக ஓர் அந்தணர் வந்தார். தட்சசிலத்தைச் சேர்ந்த வேதியரான அவர் சகல கலைகளிலும் விற்பன்னர். விஷ்ணு குப்தர் என்றும் இவருக்கு ஒரு பெயர் உண்டு. குழந்தைகளின் விளையாட்டைக் கண்டார். அவரது கூரிய பார்வை மன்னனுக அமர்ந்து நீதி வழங்கும் சிறுவன் மீது பதிந்தது. அவனிடம் ஒளிந்துள்ள தகுதியையும் மேதையையும் உணர்ந்து கொண்டார். இந்தச் சிறுவனுல் இந்த நாடு மகோன்னதமான நிலையை அடையப் போகிறது என்று தீர்க்கதரிசியான அவர் தீர்மானத்துக்கு வந்தார். விளையாட்டு முடிந்ததும் சிறுவனை அழைத்து விசாரித்தார். பிறகு அவனுடன் வேடனிடம் சென்ருர். அவனுக்கு அந்தக் காலத்து நாணயமான 'கார்ஷா'வில் ஆயிரம் கார்ஷாக்களை எண்ணிக் கொடுத்துச் சந்திர குப்தனை விடுதலை செய்து தம்முடன் தட்சசிலத்துக்கு அழைத்துப் போனுர்.

மாடு மேய்த்துக் கொண்டிருந்த பையனுக்குச் சாணக்கியர் கல்வி கற்பித்தார். போர் முறைகளைச் சொல்லிக் கொடுத்தார். ஏழு எட்டு ஆண்டுகள் வரை இப்படிக் குருகுல வாசம் செய்து வந்தான் சந்திர குப்தன். இந்தச் சமயத்தில் பாரத நாடு எத்தகைய நிலையிலிருந்தது என்பதைத் தெரிந்து கொண்டால்தான் சந்திர குப்த மௌரியரின் பெயர் பொன்னெழுத்துக்களால் சரித்திரத்தில் பொறிக்கப்படுவதற்கு எப்படித் தகுதி பெற்றது என்பது விளங்கும்.

மாடு மேய்த்த மாமன்னர்

ஜனாஸ்ரீ



கிரேக்க மாவீரன் அலெக்ஸாந்தர் பாரதத்தின் மீது படையெடுத்து வந்திருந்தான். வடமேற்குப் பகுதி சிறு சிறு ராஜ்யங்களாகச் சிதறுண்டு கிடந்தது. இந்திய அரசர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை. பிளவு, பலவீனம் இரண்டும் கிரேக்க மன்னன் அலெக்ஸாந்தருக்குச் சாதகமாக ஆயின.

மகத சாம்ராஜ்யத்தை இப்போது ஆண்டவன் மகா பத்மநந்தன். தந்தையைக் கொன்று சிங்காதனமேறியவன். பெரிய வீரன். ஆனுல் தனது தீய செயல்களினுல் மக்களின் வெறுப்புக்கு ஆளாகி யிருந்தான். இவனது புதல்வர்களோ எட்டுப் பேர். இவர்களையும்

சேர்த்து நவநந்தர்கள் என்று அழைத்தார்கள் மக்கள். நவநந்தர்களின் கொடுங்கோல் ஆட்சியினால் குமுறிக் கொண்டு இருந்தார்கள் குடிமக்கள்.

அலெக்சாந்தரிடம் இந்திய மன்னர்கள் அடைந்த தோல்வியைக் கண்டு சந்திர குப்தனின் நெஞ்சம் குமைந்தது. அதனால் வீரமும் துணிவும் கொண்ட அவர் அந்நியர்களை இந்த மண்ணிலிருந்து விரட்டியே தீருவேன் என்று சபதமெடுத்துக் கொண்டான். மாற்றானின் போர் முறைகளில் உள்ள சிறப்பியல்புகளை உன்னிப்பாகக் கவனித்தார். தம்மிடையே உள்ள குறைபாடுகளையும் உணர்ந்தார். ஆசிரியர் சாணக்கியரும் மாணவன் சந்திர குப்தனும் அறிவும் ஆற்றலுமாகச் செயல்பட்டார்கள்.

பாஞ்சால மக்களின் மனத்தில் சுதந்திர எழுச்சியை உருவாக்குவதற்காகச் சாணக்கியரும் சந்திர குப்தரும் நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்கள். பாஞ்சால மக்கள் வீரத்துக்குப் புகழ் பெற்றவர்கள். தக்க தலைவன் இல்லாமையால் உற்சாகம் குன்றி இருந்தனர். இப்போது வழி காட்டியாக அறிவாளி சாணக்கியரும் படைத் தலைவனாக வீரன் சந்திர குப்தனும் கிடைக்கவே பொங்கி எழுந்தார்கள். சந்திர குப்தன் தன் படையில் சேர்ந்த ஏராளமான வீரர்களுக்குப் புதிய முறையில் போர்க் கலையைப் பழக்கி வைத்தான். இதற்குள் அலெக்ஸாந்தர் மேற்கொண்டு தம் படையெடுப்பைத் தொடராமல் திரும்பி இருந்தார். ஆனால் அவர் வென்ற பகுதிகளில் கிரேக்கப் பிரதிநிதிகள் ஆட்சி புரிந்து வந்தார்கள். அவர்களையெல்லாம் போரில் வென்று மூன்றே ஆண்டுகளில் பாரத மண்ணில் யவனப் பூண்டே இல்லாமல் செய்து விட்டார் சந்திர குப்தர்.

இப்படியே பாரதத்தின் மேற்குப் பகுதியை மீட்ட பின் உள் நாட்டிலே தம் கவனத்தைத் திருப்பினார். அவரது குறிக்கோள் மகத தேசம். நவநந்தர்களின் கொடுங்கோலாட்சியில் மக்கள் படும் துயரம் பற்றி அவருக்கு முன்பே தெரியும். பெரும் படை பலம்கொண்டவன் நந்த மன்னன். அவனை எதிர்ப்பதற்குப் போதுமான படை வலிமை பெற்றிருக்கவில்லை சந்திர குப்தர். ஆனால் சாணக்கியரின் ராஜ தந்திரமும் இவருடைய மனோ வலிமையுமே நவநந்தர்களை எதிர்க்கும் துணிவைக் கொடுத்தன. எல்லாவற்றுக்கும் மேலாக மகத மன்னன் குடி மக்களின் வெறுப்பைப் பெற்றிருந்தான். சாணக்கியரின் ராஜ தந்திரம் நந்த மன்னரின் பெரிய அதிகாரியங்களைச் சந்திர குப்தர் பக்கம் வரும்படி செய்தது. எண்ணமாளாத படைகொண்ட நவநந்தர்களைப் போரில் விரட்டியடித்து வெற்றி வாகைசூடினார். பாஞ்சால அதிபதியாக இருந்தவர் மகத சாம்ராஜ்யாதிபதியானார். இந்த இரு வெற்றிகளை அடுத்து அவர் மற்ற பகுதிகளையும் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்காகப் பெரும் படை ஒன்றைத் திரட்டினார். வெறும் மண்ணாசையில் மட்டும் இவர் இப்படிப் படையெடுக்க முடிவு செய்யவில்லை. சிறுசிறு ராஜ்யங்களாக இருப்பதினால் மன்னர்கள் தங்களுக்குள் சண்டை பூசலிட்டுக் கொண்டு அந்நிய நாட்டான் உள்ளே வருவதற்கு வாய்ப்பு அளித்துவிடுகிறார்கள். எல்லா அரசர்களையும் ஒரு குடைக் கீழ் கொண்டு வந்தால் போர் என்று வரும் போது எல்லோரும் ஒருங்கிணைந்து எதிர்க்கலாம் என்பது சாணக்கிய தந்திரம். அதையே செயல் படுத்தினார் சந்திரகுப்தர். மௌரியப் படைகளை எதிர்த்த மன்னர்கள் எல்லாரும் படுதோல்வி கண்டார்கள்.*

இப்படியாக, சந்திர குப்தரின் சாம்ராஜ்யம் கிழக்கே வங்கத்திலிருந்து மேற்கே இந்துகுஷ் மலை வரையிலும், வடக்கே இமயத்திலிருந்து தெற்கே நர்மதை நதி வரையிலும் விரிந்து பரந்து கிடந்தது. இத்தனை பெரிய பகுதியை மிக்க திறமையோடு ஆட்சி புரிந்தார் என்பதினால்தான் சந்திரகுப்தரின் பெயரைச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறித்திருக்கிறார்கள். பெரிய அதிகாரங்கள் மன்னரின் நேரடி மேற்பார்வையில் இருந்தன. ஆட்சியைக் கவனிக்க அமைச்சர் குழு இருந்தன. மத்திய ஆட்சி பதினெட்டு இலாக்காக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. சாம்ராஜ்யம் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ராஜ பிரதிநிதிகள் அப்பகுதிகளை ஆட்சி புரிந்தனர். கிராமங்களை நிர்வகிக்கக் குழுக்கள் இருந்தன. அரசியல் சாஸ்திரம் எழுதிய சாணக்கியரின் சீடரான சந்திர குப்தரின் ஆட்சி எல்லா வகையிலும் மேம்பட்டிருந்தது. இருபத்து நான்கு ஆண்டுகள் மிகத் திறமையுடன் ஆட்சி புரிந்தார் — மாடு மேய்ப்பவராக வாழ்க்கையைத் தொடங்கிய சந்திரகுப்தர் என்றால் அவர் பெயரைப் பொன்னால் என்ன, வைரத்தால் கூடப் பொறிக்கலாம் அல்லவா?

நினைவுச் சின்னம்

ஒரு நாய்க்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்தியிருப்பதைப் பற்றிக் கோகுலத்தில் படித்தது ஞாபகம் இருக்கிறதல்லவா? ஆனால் பூச்சி, புழு, பறவைகளுக்கெல்லாம் கூட ஞாபகச் சின்னம் ஏற்படுத்தி யிருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அமெரிக்காவில் முதலில் விவசாயிகள் பருத்தியை மிக ஏராளமாகப் பயிர் செய்து வந்தார்கள். ஆனால் ஒரு வகைப் பூச்சி விடாப்பிடியாகப் பருத்திச் செடிகளுக்குப் பெருந் தீங்கிழைத்து வந்தது. விவசாயிகள் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பருத்திச் செடிகளை அந்தக் குறிப்பிட்ட வகைப் பூச்சிகளிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை. மகசூலும் பெருமளவில் குறைந்து போய் விட்டது. இதனால் வேறு வழியில்லாத விவசாயிகள் பருத்தியைப் பயிரிடுவதற்குப் பதிலாக வேறு வகைப் பயிர்களைப் பயிரிடத் தொடங்கினர். இதில் ஆச்சரியம் என்னவென்றால் இப்பயிர்கள் பருத்தியைவிடக் கணிசமான லாபத்தைக் கொடுத்தன. விவசாயிகளுக்கோ இரண்டு பங்கு மகிழ்ச்சி. பூச்சிகளிடமிருந்து பயிர்கள் தப்பியதுமல்லாமல் அவர்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே இலாபமும் கிடைத்தது. அந்தப் பூச்சிகள் அப்படிப் பருத்தியை அழிக்காமலிருந்தால் இந்த லாபம் கிடைத்திருக்குமா? எனவே, அந்த விவசாயிகள் அந்தப் பூச்சிகளுக்குத் தங்கள் நன்றியைக் காட்டும் வகையில் அலபாமா மாகாணத்தில் ஒரு நினைவுச் சின்னத்தையே ஏற்படுத்திவிட்டனர்!



பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவுக்குச் சப்பாத்தியைப் போன்ற ஒரு செடி இறக்குமதியானது. அதன் பூக்கள் பார்க்க மிகவும் அழகாக இருக்கும். இதனால் விவசாயிகள் இதனைத் தங்கள் நிலங்களுக்கு வேலியாக அமைத்துக் கொண்டனர். அதில்தான் ஆபத்தே தொடங்கியது. காலம் செல்லச் செல்ல அந்தச் செடிகள் பயங்கர அளவில் பெருக ஆரம்பித்தன. வயல்களுக்குள்ளேயும் வளர ஆரம்பித்தன. பிறகு பயிர்கள் எப்படி வளரும்? வேலியே பயிரை மேயத் தொடங்கிவிட்டது! அப்பொழுதுதான் விவசாயிகள் அதன் அபாயத்தை உணர ஆரம்பித்தனர். இருந்தாலும் இனி என்ன செய்வது? சளைக்காமல் அவற்றை வெட்டி எறிந்தும் தீயிட்டும் அழித்தனர். அப்படியும் அந்தச் செடிகள் பெருகிக் கொண்டேயிருந்தன. மயில்ராவணனைப் போல ஒரு செடியை ஒழித்தால் ஒன்பது செடிகள் வந்தன.

கடைசி முயற்சியாக அமெரிக்காவிலிருந்து ஒரு வகைக் கம்பளிப் பூச்சியை வரவழைத்து இந்தச் செடிகளில் விட்டனர். சில வருடங்களிலேயே கம்பளிப் பூச்சிகள் பெருகி, பயிரை வளர விடாது செய்யும் இந்தச் செடிகளனைத்தையும் நாசம் செய்து விட்டன. அந்தக் கம்பளிப் பூச்சிகள் செய்த உதவியையும் அவர்கள் மறக்கவில்லை. அதற்கு ஒரு நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தினர்.

ஏதேதோ செய்து பார்த்தார்கள். எந்த மருந்துக் கொல்லியினாலும் இந்தப் பூண்டை அழிக்க முடியவில்லை.





இது யுடா என்னும் மாகாணத்தில் நடந்தது. வயல்வெளிகளெல்லாம் பச்சைப் பசேல் என்று செழிப்பாக இருந்தன. அப்பொழுது ஒரு பெரிய படை எங்கிருந்தோ திடீரென்று வந்தது. அது இராணுவப் படை என்று நினைத்தீர்கள் ? அதுதான் இல்லை. அது ஒரு வெட்டுக்கிளிப் படையெடுப்பு. அந்தப் படையெடுப்பைச் சாதாரணமாகக் கருதி விடாதீர்கள். அந்தப் படை வருவது கரிய மேகக் கூட்டமே வருவது போல் இருக்கும். அவை கண்ணில் கண்ட பயிர் பச்சைகளையெல்லாம் ஒன்று விடாமல் தின்று கொண்டே வந்தன. ஒரு தடவை இந்தப் படை ஒரு பெரிய வயலை முற்றுகையிட்டால் பிறகு மிஞ்சுவது வெறும் நிலமும் பெருமளவில் நஷ்டமும்தான். விவசாயிகளுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள். அப்பொழுதுதான் கடற்கரையிலிருந்து ஒரு பெரிய பறவைக் கூட்டமொன்று பறந்து வந்தது. பறந்து வந்த அந்தப் பறவைக் கூட்டம் வெட்டுக்கிளி கூட்டம் முழுவதையும் தின்று தீர்த்துவிட்டது. அப்பொழுதுதான் விவசாயிகளுக்கு மூச்சு வந்தது. பயிர்களெல்லாம் காப்பாற்றப்பட்டு விட்டன. அந்தப் பறவைக் கூட்டம் மட்டும் வராமலிருந்திருந்தால் ஏராளமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கும். நல்லவேளையாகப் பறவைகள் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றிவிட்டன. அந்த நன்றியை மறப்பார்களா, விவசாயிகள் ? உவர் ஏரி (Salt Lake) நகரில் அந்தப் பறவைகளுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பிவிட்டனர்.

— ஆர். இளங்கம்பன்

கிட்டுவின் வருகைக்காக அவன் நண்பர்கள் காத்திருந்தார்கள். அவன் வந்தால்தான் விளையாட்டில் களை கட்டும். தூரத்தில் கிட்டுவும் அவன் தங்கை பட்டுவும் வந்து கொண்டிருந்தார்கள்.

''மந்திரவாதியே வருக, வருக! மாட்டுப் பொங்கல் ஆயிற்று?'' என்று வரவேற்றான் வாசு.

''அதென்ன கையில்?... ஓ, சீட்டுக் கட்டா? உனக்குச் சீட்டாடக்கூடத் தெரியுமா?'' என்றான் சீனு. ''குழந்தைகள் சீட்டாடக் கூடாதுன்னு எங்க வீட்டிலே திட்டுவாங்க'' என்றான்.

''சீட்டு விளையாடலாம். அது நம் புத்தி கூர்மையையும் சிந்தித்துச் செயல்படும் திறனையும் வளர்க்கும். ஆனால் காசு வைத்து விளையாடுவதுதான் தவறு'' என்றான் கிட்டு.

''அது சரி, இன்னிக்கு என்ன மந்திர வேலை செய்து காட்டப் போகிறாய்? அந்தச் சீட்டுக் கட்டுல்தான் ஏதோ வேலைத்தனம் இருக்கிறது!'' என்றான் கோபு.

''ஆமாம்...'' என்று அதிலுள்ள ஜோக்கரை எடுத்துத் தனியே வைத்துவிட்டு, ''ஒன்றிலிருந்து பத்துக்குள் ஓர் எண்ணைக் கூறுங்கள், பார்க்கலாம்'' என்றான் கிட்டு.

''ஒன்பது!'' என்றார்கள் ஒரே குரலாக எல்லாரும். கிட்டு தன்னிடமிருந்த சீட்டுக் கட்டிலுள்ள நான்கு ஜாதி (க்ளாவர், ஸ்பேட், டைமண்ட், ஆட்டின்) ஒன்பதுகளையும் எடுத்துத் தனியாக வைத்து விட்டான். பிறகு இந்தக் கட்டில் மொத்தம் எத்தனை சீட்-

நீங்களும் மந்திரவாதியாகலாம்

மாயமாக வரும் சீட்டு!

டுக்கள் இருக்கின்றன?'' என்று வினா எழுப்பினான்.


''ம்... நாற்பத்தி எட்டு!'' என்றான் நாணு. கிட்டு தன் கையிலுள்ள சீட்டுக்களைக் குப்புறக் கவிழ்த்துத் திண்ணை மீது ஆறு வரிசை வைத்து வரிசைக்கு எட்டு வீதம் மாற்றி மாற்றி விநியோகித்தான். ஆறு வரிசை — வரிசைக்கு எட்டுச் சீட்டுக்கள். ''இப்போது நான் எட்டிப் போய் நின்று கொள்கிறேன். திரும்பி. நீங்கள் இந்த வரிசையில் ஏதாவது ஒன்றிலிருந்து நடுவில் ஒரு சீட்டை எடுத்து அது என்ன எண், ஜாதி என்பதைப் பார்த்துக்கொண்டு அதை எதிலிருந்து எடுத்தீர்களோ அந்தக் குப்பலின் மேலாகக் கவிழ்த்து வைத்துவிடுங்கள். நான் நீங்கள் உருவிப் பார்த்து வைத்த சீட்டு எது என்பதை என் மாஜிக் மகிமையினால் கண்டு சொல்லி விடுகிறேன்'' என்று கூறிவிட்டு எட்டிப் போய் விட்டான். கிட்டுவின் தோழர்கள் அவன் சொன்னபடியே செய்துவிட்டு அவனை அழைத்தார்கள்.

கிட்டு வந்தான். ஆறு குவியல்களையும் ஒன்றன் மீது ஒன்றாகக் கவிழ்ந்த நிலையிலேயே அடுக்கி ஒரே குவியலாக்கினான். பிறகு ஒவ்வொரு சீட்டாக நிமிர்த்தி வைத்துக் கொண்டே வந்தவன் டக்கென்று ஒரு சீட்டைத் தூக்கிக் காட்டி ''இதுதானே நீங்கள் எடுத்த சீட்டு?'' என்றான். அப்போது பார்க்க வேண்டுமே அவன் தோழர்களின் முக பாவங்களை!


''டே டே டே டே....! எப்படிடா?'' என்று கிட்டுவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''மாயமல்ல, மந்திரமல்ல. ஆனால் தந்திரம்!'' என்று கிட்டு தன் வேலைத் தனத்துக்கு விளக்கம் கொடுத்தான். ''முதலில் சீட்டுக் கட்டிலுள்ள பன்னிரண்டு படச் சீட்டுக்களையும் தனியே எடுத்துக் கட்டின் மேலே ஆறும் கீழே ஆறுமாக வைத்துக் கொண்டுதான் உங்களிடம் வந்தேன். நீங்கள் குறிப்பிட்ட ஒன்பது எண்ணுள்ள நான்கு சீட்டுக்களை அப்புறப்படுத்திய பிறகு மீதிச் சீட்டுக்களை ஆறு வரிசையாக வைத்தேனல்லவா? அப்போது ஒவ்வொரு கும்பலிலும் உள்ள எட்டுச் சீட்டுக்களில் மேலே ஒரு படமும் கீழே ஒரு படமுமாக இருந்திருக்கும். அது சீட்டுக்களை வரிசையாக அப்படி அடுக்கி விநியோகிக்கும் போது தானாகவே அமைந்து விடும். நீங்கள் எடுத்துப்பார்த்து நினைவில் வைத்துக் கொண்ட சீட்டை அந்தக் கும்பலின் மேலேதானே வைத்தீர்கள்? அப்போது படச் சீட்டின் மீது நீங்கள் எடுத்த சீட்டு இருக்கும். நான் வந்ததும் ஆறு வரிசைக் குப்பல்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைத்து ஒன்று சேர்த்தேன். பிறகு ஒவ்வொன்றாக நிமிர்த்தினேன். அப்படி நிமிர்த்தும் போது ஒரு படம், ஆறு எண்கள், மறுபடியும் ஒரு படம், ஆறு எண்கள் என்று எட்டுச் சீட்டுக்கள் தொடர்ந்து வரவேண்டும். ஆனால் நீங்கள் உருவிய குப்பல் வரும் போது இந்த வரிசை மாறிப்போகும். இரண்டு படச் சீட்டுக்களிடையே ஓர் எண் சீட்டு. நீங்கள் மேலாக வைத்தது வரும் இல்லையா? அதை 'டக்' என்று எடுத்துக் காட்டுவது வெகு சுலபம்'' என்று விளக்கினான் மந்திரவாதி கிட்டு.

''அடப் பாவி! இவ்வளவுதானா?'' என்று அவன் நண்பர்கள் அன்போடு அங்கலாய்த்து மகிழ்ந்தார்கள்.



தெரியுமா ?



1584. சீனக் குடியர்சை உருவாக்கியவரின் பெயர் தெரியுமா ?

1585. 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா' என்ற புகழ்பெற்ற ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தின் முதல் பதிப்பு எங்கு எப்போது வெளியிடப்பட்டது.

1586. உலகிலேயே மிக அற்புதமான, அழகான, கம்பீரமான கட்டடம் பாரிஸ் நகரிலிருந்து பன்னிரண்டாவது மைலில் உள்ளது. இதன் பெயர் என்ன? கட்டியவர் யார் ?

1587. ஐரோப்பாவில் தொழில் புரட்சி ஏற்பட்டது எந்த ஆண்டில்?

1588. சந்திர குப்த மௌரியரின் அவையிலிருந்த கிரேக்க ஸ்தானீகரின் பெயர் தெரியுமா ?

1589. இந்திய சுதந்திரத்துக்காக அரும்பாடு பட்டவர்களில் ஒருவர். அயர்லாந்தைச் சேர்ந்த பெண்மணி. அவர் யார் ?

1590. பெரிய கவியாகவும் அதே சமயம் துறவியாகவும் விளங்கினர் வட இந்தியாவில் ஒருவர். அவர் யார் தெரியுமா ?

1591. கௌடில்யர்—என்ற பெயர் உனக்கு எதை நினைவுபடுத்துகிறது?

1592. உஷ்ணமானிகளான ஃபாரன் ஹீட், ஸெண்டி கிரேடு ஆகிய இரு கணக்கீடுகளும் எப்போது ஒரே அளவைக் குறிக்கும் ?

1593. மலேரியா என்ற விஷ நோய்க்குக் காரணம் கொசுக்கள் என்ற உண்மையைக் கண்டவர் யார்?

1594. பங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞானக் கழகத்தை (Indian Institute of Science) நிறுவியது யார் ?

1595. நமது உடலில் உள்ள மிக நீளமான எலும்பு எது தெரியுமா ?

1596. மனித உடலில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

1597. ரேடியோ ஒலிபரப்புக்கான முதல் உரிமையைப் பெற்றவர் யார் ?

1598. பெடல் உள்ள முதல் துவிச் சக்கர வண்டியைத் தயாரித்தது யார் தெரியுமா ?

1599. உலகின் நான்கு பிரதான டென்னிஸ் சாம்பியன் ஷிப் பட்டங்களை இரண்டு தடவை பெற்ற பாக்கியசாலியின் பெயர் என்ன?

1600. உலகின் மிகச் சிறந்த கிரிக்கெட் மட்டைகளைத் தயாரிக்க உதவும் மரங்கள் இங்கிலாந்தில்தான் உள்ளன. அதன் பெயர் என்ன?

1601. பாரதத்துப் பெண்களில் தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் யார் ?

1602. மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக ஆடி இரட்டை செஞ்சுரி போட்ட முதல் இந்தியர் யார் ?

1603. பாட்மிண்டன் ஆட்டம் தோன்றியது எங்கே ?

1604. இங்கிலாந்தின் சரித்திரத்தை எழுதியவர் யார்?

1605. ராம சரித மானஸ் என்ற நூலை எழுதியவர் யார்?

1606. குரு நானக்கின் உபதேசங்களைக் கொண்ட நூலுக்கு என்ன பெயர்?

தெரியுமே !



1584 டாக்டர் ஸன் யாட் சென் 1911ல். 1585. ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரோ நகரில் 1768ம் ஆண்டு டிசம்பரில். 1586. வெர்சேல்ஸ் அரண்மனை. பதினான்காம் லூயி மன்னரால் கட்டப்பட்டது. 1587. பதினெட்டாம் நூற்றாண்டில் 1588 மெகஸ்தனிஸ். 1589 டாக்டர் அன்னிபெஸண்ட். 1590. கபீர்தாஸர். 1591. சாணக்கியர் என்ற மிகச் சிறந்த ராஜதந்திரியை சந்திர குப்த மௌரியரின் பிரதம மந்திரியை. 1592. மைனஸ் 40 டிகிரிசெண்டிகிரேட் மைனஸ் 40. டிகிரி ஃபாரன்ஹீட்டுக்குச் சமம். 1593 ரோனல்ட் ரோஸ் என்பவர். 1594. ஜே. என். டாடா அவர்கள். 1595. தொடை எலும்பு. 1596. இருநூற்று ஆறு எலும்புகள். 1597. மார்கோனி என்பவரால் 1896 ஜூன் 22ல் பெறப்பட்டது. 1598. ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த கிர்க் பாட்ரிக் மாக்மில்லன் என்பவரால் 1839ல். 1599. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராட்லேவர் (Rod Laver) 1963-1969 ஆண்டுகளில் பெற்றார். 1600. வில்லோ மரம். 1601. மகாராஷ்டிராவைச் சேர்ந்த கேடி சார்ஜ்மான் (Kaity Chargeman). 1602. திலீப் ஸர்தேசாய். 1971ல் லண்டனில் 212 ரன்கள் எடுத்தார். 1603. இந்தியாவில் உள்ள பூனா நகரில். ஆனால் 1960ல் இது இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1604. மெக்காலே. 1605. பக்த துளசிதாஸர். 1606. கிரந்த் ஸாஹேப்.

எல்லைமீறிப் பறந்த இகாரஸ்

கிருஷ்ணவேணி



அகியன் கடலின் கீழ்ப் பகுதியில், கிரீட் என்று ஒரு தீவு. கிரீஸ் தேசத்துடன் தொடர்புடைய தீவு இது. புராதன கிரேக்கர்களின் காலத்தில் புகழ் பெற்று விளங்கியது கிரீட் என்ற இத்தீவு. இன்றும் இங்கு பண்டைய நாகரீகத்தின் இடிபாடுகளை — அரண்மனைகள் ஆலயங்கள் ஆகியவற்றை — காணலாம்.

இந்தக் கிரீட் தீவை ஒரு காலத்தில் மினோஸ் என்ற மன்னன் ஆண்டு வந்தான். இவனிடம் மிகப் பெரிய கடற்படை இருந்தது. மினோஸின் புகழ் வெகு தூரம் பரவியிருந்தது. இவன் கொடியவனாகவும் விளங்கினான். அதீனியர் என்ற வகுப்பாரை ஆண்டுதோறும் ஏழு வாலிபர்களையும் ஏழு கன்னியரையும் தமக்குக் காணிக்கையாக அனுப்ப வேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். இந்த வாலிபர்களையும் கன்னிகைகளையும் பயங்கரமான ஒரு மிருகத்துக்குப் பலி கொடுத்தான் மினோஸ் மன்னன். இந்த மிருகத்தின் பெயர் மினோடார். காளையின் தலையும் மனித உடலும் கொண்டது இந்த மினோடார் மிருகம். இந்த மினோடார் பாதுகாப்பாக வாழவும், இதற்குப் பலியாக்கப்படும் மனிதர் தப்பிவிடாதிருக்கவும் விசேஷமான ஒரு கட்டடத்தைக் கட்ட முடிவு செய்து மினோஸ் புகழ் பெற்ற சிற்பியான டாடலஸ் என்பவனிடம் இப்பொறுப்பை ஒப்படைத்தான். இந்த டாடலஸைக் கிரேக்கர்கள் முதல் மகா சிற்பி, கைவினைக் கலைஞன், பொறி இயல் நிபுணன் என்று புகழுவது வழக்கம். தச்சு வேலைக்கான பல்வேறு ஆயுதங்களைக் கண்டுபிடித்து உருவாக்கியது இந்த டாடலஸ்தான். கரடுமுரடாகச் செதுக்கி உருவாக்கும் சிலைகளில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கி நிஜமான மனிதர்களைப் போலவே சிலைகளை உருவாக்கும் முறையை ஆரம்பித்தவன் இவன்தான். இவ்வாறு பல்வேறு சாதனைகளைச் செய்திருந்தாலும், மினோடார் ராட்சத மிருகத்துக்கான கட்டிடத்தை உருவாக்கிக் கொடுத்தபோது மினோஸ் மன்னன் வெகுவாக மகிழ்ந்து போனான்.

அது ஓர் அற்புதமான கட்டிட அமைப்பு. வெளியில் இருப்பவர்கள் அதன் உள்ளே செல்லவோ, உள்ளே இருப்பவர்கள் வெளியே வரவோ எளிதில் முடியாது. சரியான வழியின் ரகசியம் அறியாதவர்களுக்கு அந்தக் கட்டிடம் ஒரு புதிர் போன்றது. வெளியேற முயலுபவர் வழி தெரியாது அதற்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டதோர் அற்புதமான அமைப்பை உரு

வாக்கிக் கொடுத்த சிற்பி டாடலஸை மன்னன் மீனஸ் மனதாரப் புகழ்ந்தான். 'இத்தகைய அற்புதமான ஆற்றலுடைய சிற்பி, பொறியியல் வல்லுனன். நமக்கு இன்னும் எத்தனையோ விதங்களில் பயன்படுவானே. இவனுடைய திறமை பிறருக்குப் பயன்படுமாறு, இல்லை, இங்கிருந்து அனுப்புவானேன்? இப்படி எண்ணம் ஓடியது மீனஸின் மனத்திலே. கிரீட் தீவின் ஏகசக்கிராதிபதியான மீனஸ் மனம் வைத்தால் டாடலஸை அங்கேயே இருத்திக்கொள்ள முடியாதா என்ன? கிரீட் தீவிலிருந்து வெளியேறும் எந்தக் கப்பலும், படகும் சிற்பி டாடலஸை ஏற்றிக்கொள்ளக் கூடாது என்று உத்தரவிட்டான். சிற்பி டாடலஸுக்குக் கடற்கரையை அடுத்த கோட்டை போன்ற ஒரு பெரிய அரண்மனையைக் கட்டிக் கொடுத்த. ''இதை உன்னுடைய தொழிற்சாலையாக்கிக் கொண்டு இந்தத் தீவிலேயே சந்தோஷமாகத் தங்கிவிடு'' என்று கூறிவிட்டான்.

ஆனால் சிற்பி டாடலஸ் இதனால் திருப்தி அடையவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவன் விரும்பியது சுதந்திரத்தைத்தான். ஓரே இடத்தில் வாழ்ந்து தன் வாழ்வை முடித்துக் கொள்ளும் இயல்புடைய பிறவியல்ல டாடலஸ். கப்பல் மூலம் அந்தத் தீவை விட்டு வெளியேற மார்க்கமில்லை என்பதை அறிந்த அந்தச் சிற்பி அங்கிருந்து தப்பிச் செல்வதற்கான வேறு மார்க்கங்களைக் காணத் தன்னுடைய திறமை முழுவதையும் செலவிடலானான்.

மீனஸ் தன்னுடைய சிற்பிக்கு அரண்மனைக் கோட்டையைக் கட்டிக்கொடுத்தானே தவிர டாடலஸின் தொழிற்கூடமான அதற்கு ஒரு தடவை கூட விஜயம் செய்யவில்லை. அப்படி அவன் வந்திருந்தால் அங்கு ஓர் அற்புதமான காட்சியைக் கண்டிருப்பான். டாடலஸின் தொழிற்கூடம் முழுதும் பல்வேறு பறவை இறகுகளால் மூடப்பட்டிருந்தது. அளவிலும் அமைப்பிலும் மாறுபட்ட ஏராளமான இறகுகள் ரகவாரியாகப் பிரிக்கப்பட்டுக் குவிக்கப்பட்டிருந்தன. இறகுகளைத் தரம் பிரித்துக்கொண்டிருந்தான் ஒரு வாலிபன். டாடலஸின் ஒரே மகன் அவன். பெயர் இகாரஸ் (சென்ற இதழில் வானத்தை வெற்றி கொண்ட மனிதர்கள் என்ற கட்டுரையில் இகாரஸ் என்பவனும் அவன் மகனும் என்று கூறியிருப்பது தவறு. டாடலஸின் மகன்தான் அந்த இகாரஸ்) தந்தைக்கு உதவியாக அந்தத் தொழிற்சாலையில் தனிமையைப் போக்கி உழைத்து வந்தான் இகாரஸ். சிற்பி டாடலஸ் ட்வைன் கயிறு, மெழுகு, கோந்து இவற்றைக்கொண்டு அந்தப் பறவை இறகுகளை மரச்சட்டத்தில் கிரமமாக அடுக்கிப் பொருத்தும் பணியில் மூழ்கியிருந்தான். ஆம், டாடலஸ் பறப்பதற்கான இறக்கைகளை உருவாக்கிக்கொண்டிருந்தான்.

இறக்கைகளைத் தயாரிக்க நீண்ட காலமாயிற்று. டாடலஸுக்கு இரண்டு பெரிய இறக்கைகளும், மகன் இகாரஸுக்குச் சிறிய இறக்கைகளும் தயாராகிவிட்டன. தொழிற்கூடத்தின் உச்சியிலே ஒரு கோபுரம். அதிலிருந்தபடி இறக்கையோடு குதித்து வானத்திலே மிதந்து பறந்தபடி தப்பிவிட வேண்டும் என்பது டாடலஸின் திட்டம். அதன்படி உச்சியிலே நின்றபடி இறக்கைகளைக் கைகளோடு இணைத்துக் கட்டிக்கொண்டார்கள். அப்போது டாடலஸ் தன் மகனிடம் பறக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகளைப் பற்றி விளக்கினான்.

''முதலில் நான் குதித்துப் பறக்கிறேன். என்னைத் தொடர்ந்து என் பின்னாலேயே நீ வா. கடல் மீதாகக் குறுக்கு வழியில் நாம் மறு கரையை அடைய வேண்டும். இல்லாவிடில் களைப்படைந்து கடலில் விழவேண்டி இருக்கும். உன்னுடைய தோள்களின் மீது உள்ள இந்த இறக்கைகள் இயற்கையானவை அல்ல. நாம் கடவுளர்களும் அல்ல, இறக்கையோடு இருப்பதற்கு. கடலுக்கு மிக அருகாகப் பறப்பாயானால் இறக்கைகள் நனைந்து பாரமாகிவிடும். கடவுளர்களைப் போல் மிக உயரமாகப் பறப்பாயானால் இந்த இறக்கைகளை உருவாக்க நான் உபயோகித்துள்ள மெழுகு சூரிய வெப்பத்தினால் உருகிவிடும். ஒலிம்பஸை நாம் அடையும்முன் இறக்கையில் உள்ள சிறகுகள் உதிர்ந்து போக நீ தலைகுப்புற விழ வேண்டியதுதான். ஆகவே என்னைப் பின்பற்றி ஆகாயத்தின் நடுவாக — மிகக் கீழேயும் இல்லாமல் மிக உயரத்திலுமில்லாமல் பறந்து வா. பத்திரமாகப் போய்ச் சேர்ந்துவிடலாம்.''


பறப்பதற்கான வழிவகைகளைக் கூறிவிட்டு விண்ணிலே குதித்தான்டாடலஸ். விரித்த இறக்கைகள் படபடக்கக் காற்று அவனை ஏந்திக் கொள்ளும் வரை கல்லாகக் கனமாக இருந்தவன் சட்டென்று இலேசாகி ஒரு நிதானத்துக்கு வந்து மிதக்கலானான். இறக்கைகளை ஒரே சீராக இயக்கவே பறவையைப் போல் விண்ணிலே வட்டமிட்டுச் சுழல முடிந்

தது டாடலஸினால். கோட்டையின் உச்சியிலே குதிக்கத் தயாராக இருந்த மகன் இகாரஸுக்குச் சமிக்ஞை செய்தான் குதிக்கும்படி. இகாரஸும் தந்தையைப் போலவே குதித்தான். இறக்கைகளை விரித்து இயக்கி அவனைக் காற்று ஏற்றுக்கொள்ளும்வரை இகாரஸின் இதயம் படபடத்தது. தந்தை எப்படித் தன் இறக்கைகளை இயக்கினாரோ அதே போன்று தானும் இயக்கினான். கொஞ்ச நேரத்தில் உடல் இலேசாகியது. அவனும் விண்ணிலே அநாயாசமாக மிதந்து பறக்கலானான்.

தந்தையும் தனயனும் ஆகாயத்திலே பறந்து கொண்டிருந்தார்கள். டாடலஸ் ஒரே சீராக, நிதானமாகத் தன் இறக்கைகளை இயக்கியபடி பறந்து கொண்டிருந்தான். அப்படிப் பறப்பதினால் களைப்பு ஏற்படாது. ஆனால் இளைஞன் இகாரஸுக்கு இந்தப் பறக்கும் அனுபவம் உள்ளத்திலே இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தி யிருந்தது. விண்ணிலே பறந்தபடி வித்தைகள் செய்யத் துடித்தது அவன் இளம் உள்ளம். மேலும் கீழும் சுழன்றும் பாய்ந்தும் செல்ல ஆசைப்பட்டான். ஒரேமாதிரி பறந்து கொண்டிருப்பது என்னவோ போலிருந்தது அவனுக்கு. மேலே மேலே உயரத்துக்குச் செல்வது மகிழ்ச்சியாகவும் இலேசாகவும் இருந்தது. 'வானம்பாடியைப் போல, பருந்தைப் போல, கடவுளர்களைப் போல....' என்று எண்ணமிட்டபடியே இகாரஸ் மேலே மேலே போகலானான். மகனின் செயலைக் கண்டு தவித்துப் போன தந்தை எச்சரிக்கைக் குரல் எழுப்பினார். ஆனால் காற்றின் போக்கிலே, வேகத்திலே அவர் குரல் அவன் செவிகளில் ஏறவில்லை.

டாடலஸின் பார்வையில் இப்போது இகாரஸ் ஒரு புள்ளியாகத் தோன்றினான்.

திடீரென்று இகாரஸ் படு வேகமாகக் கீழே வந்து கொண்டிருந்தான். உயர வீசி எறியப்பட்ட கல் பூமியை நோக்கி வருமே, அந்த வேகத்தில் வந்து கொண்டிருந்தான் இகாரஸ். டாடலஸ் பார்த்துக் கொண்டிருக்கும் போது அவனையும் கடந்து கீழே கீழே போய்க் கொண்டிருந்தான் மகன் இகாரஸ். அவன் தோள்களில் பிணைத்திருந்த மரத்தினாலான கூடு அப்படியே இருந்தது. ஆனால் அதில் தைக்கப்பட்டிருந்த இறகுகள் ஒன்றையும் காணோம். சூரியனின் வெப்பம் மெழுகுகளை உருக வைத்து விட்டது. தந்தையின் எச்சரிக்கையைப் புறக்கணித்த



இகாரஸ் அதன் பலனை அனுபவித்து விட்டான். குன்றைத் தாண்டி, தலைக்குக் கீழே உருண்டு சென்ற மகனை ஒரு விநாடி பார்த்தான் டாடலஸ். அடுத்த நிமிஷம் பெருத்த ஓசையுடன் இகாரஸ் கடலில் விழுந்து மறைந்து போனான். தந்தையின் உள்ளம் தவித்தது. வானத்திலே வட்டமடித்துக் கீழாகப் பறந்தான் டாடலஸ். ஆனால் கடலுக்கு மிக அருகில் போகவில்லை. இறக்கைகளில் கடல் ஈரப்பு ஏறிக் கனமாகி விடக் கூடாதே. மகனோடு தானும் கடலுக்குப் பலியாவதனால் என்ன பலன் என்று கனத்த இதயத்தோடு டாடலஸ் தனது பிரயாணத்தைத் திட்டமிட்டபடி ஒரே சீராகப் பறந்து முடித்தான். கடைசியில் கரை இறங்கினான். உடல் களைப்பை விட உள்ளத்து வலி அதிகமா யிருந்தது. அவனுடைய ஒரே நம்பிக்கையான செல்வ மகன், இகாரஸை இழந்த பிறகு அவனுக்கு இந்த உலகில் வேறு எதுவுமே பிடிக்கவில்லை. அதன் பிறகு அந்த இறக்கைகளை மறுபடியும் அவன் பயன்படுத்திப் பறக்கவுமில்லை. மற்றவர்களுக்கு அந்தக் கலையைக் கற்பிக்கவுமில்லை.



ஜெய் ஹனுமான் 29
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
பச்சிலைகளைப்
பகுத்தறிந்து பறிப்
பதற்கான பொறுமையும்
அவகாசமும் இல்லாத
ஆஞ்சநேயர் சஞ்சீவிகள்
நிறைந்த அந்த மலையையே
பெயர்த்து எடுத்துக்கொண்டு கிளம்புகிறார்.
மூலிகையின் காற்றுப்பட்ட
உடனேயே மாண்டு கிடந்த
வானரர்கள் அத்தனைபேரும்
தூங்கி விழித்தவர்களைப்போல
உயிர் பெற்று எழுகின்றனர்.
அஞ்சனை மைந்தா! தக்க தருணத்தில் சஞ்சீவி கொண்டு
வந்த நீ, இனி சிரஞ்சீவி என்றே அழைக்கப் படுவாய்.
இந்த மலையை அதன் இருப்பிடத்திலேயே கொண்டுபோய்
போட்டு விடு வா.
ஜெய் ஹனுமான்!
உயிர்ப்பிச்சை
தந்த உத்தமனே,
போற்றி போற்றி!
அந்தக் குரங்கினால் ஆகாதது
கிடையாது போலிருக்கிறதே.
யுத்தத்தின் ஆரம்பத்திலிருந்து
செத்துப்போன அத்தனை வான
ரர்களையும் உயிர்ப்பித்து
விட்டானே அந்த ஹனுமான்.
இறந்த உடல்களை அவர்கள் இதுவரை
வைத்திருந்தார்கள். ஆனால் நாமோ நம்மவர்
ஆணைப்படி இறந்தவர்களைக் கடலில் வீசி அமிழ்த்து
விட்டோம்!
வானரர்களிடம் இத்தனை
அரக்கர் மடிந்தார்களா என்று
பார்ப்பவர் நகைக்க இடமாகுமே
என்று அப்படிச் செய்ய ஆணை
யிட்டேன்.
அதனால் சஞ்சீவி மகிமையின்
பலன் நமக்குக்
கிடைக்க வில்லை.


வானரப்படையைத் தாக்க நிகும்பன் என்ற சூரனை அனுப்புகிறான் ராவணன்.
மாருதி... காப்பாற்று... காப்பாற்று!
ஆஞ்சநேயா, அபயம்... ஐயோ...! என்ன வெப்பம்....?
நிகும்பன் வீசிய கதாயுதம் வாயு குமாரின் மார்பில் பாய்ந்து தாக்குகிறது. அதன் தாக்குதலால் மாருதி சற்றே தள்ளாடுகிறார். அப்போது நிகும்பன் வாயு புத்திரனைத் தூக்கிக் கொண்டு வானத்திலே கிளம்பி விடுகிறான்.
விண்ணிலே கொண்டு செல்லப்பட்ட மாருதி மூர்ச்சை தெளிந்து நிகும்பனைக் கீழே அமுத்திக் கொண்டு அவன் தலையைத் திருகி வதைக்கிறார்.
தோல்வி மேல் தோல்வி கண்ட ராவணன் தன் மகன் இந்திரஜித்தைப் போர்க்களம் அனுப்புகிறான்.
வீரத்தினால் மட்டும் இவர்களை வெற்றி கொள்ள முடியாது. நிகும்பிலை என்ற யாகம் செய்து வெல்ல முடியாத வலிமை பெறுவேன். ஆனால் யாகம் விக்கினமின்றி நிறைவுற வேண்டுமே..... ம்.. அதற்கு ஒரு வழி செய்கிறேன்.
மாருதிக்கிறுக்கே! இவளுக்காகத்தானே நீ முன்பு இங்கு வந்தாய்? அந்த அற்பன் ராமன் போராடுவதும் இவள் பொருட்டுத்தானே? இதோ இவளை என் வாளுக்கு இரையாக்கி விடுகிறேன்.
ஐயோ! இதென்ன விபரீதம்...?
அம்மம்மா! ஜானகியின் தலையைக் கொய்துவிட்டானே பாவி...
தொடரும்



உழைப்பை மறவாதே!

பல்லால் நகத்தைக் கடிக்காதே
பள்ளிச் சுவரில் கிறுக்காதே
சொல்லால் பிறரை வருத்தாதே
சோம்பித் தினமும் திரியாதே

கல்லால் நாயை அடிக்காதே
கடிந்து பிறரைப் பேசாதே
பொல்லாப் பெயரை வாங்காதே
புத்தி கெட்டே அலையாதே

அழுக்குச் சட்டை அணியாதே
அன்புத் தோழனைக் கெடுக்காதே
ஒழுங்கு தவறி நடக்காதே
உழைப்பை என்றும் மறக்காதே

-சாரதா மைந்தன்



மிட்டாய் வண்டியும் பட்டுத்தங்கையும்!

வீதியில் போகுது
மிட்டாய் வண்டி — அதை
வேடிக்கை பார்க்கிறாள்
பட்டுத் தங்கை


ஓசை முழக்குது
மிட்டாய் வண்டி — பக்கம்
ஓடிப்போய் நிற்கிறாள்
பட்டுத் தங்கை.

கண்ணைப் பறிக்குது
மிட்டாய் வண்டி — உடன்
காசைக் கொடுக்கிறாள்
பட்டுத் தங்கை

பண்டத்தை விற்குது
மிட்டாய் வண்டி — அதைப்
பார்த்துக் களிக்கிறாள்
பட்டுத் தங்கை.

மெல்ல நகருது
மிட்டாய் வண்டி — மனம்
விட்டுச் சிரிக்கிறாள்
சிட்டுத் தங்கை.

'புவனை கலைச்செழியன்'



பக்கம் எவரும் வரமாட்டார்!


ஆடும் ஊஞ்சலை ரயிலாக்கி — நான்
அதிசயப் பயணம் தொடங்கும்முன்
தேடும் மாமா வந்திடுவார் — ஒரு
திடீர் வேலையைத் தந்திடுவார்!

மாடிச் சுவரின் சரிவினிலே — நான்
மாவீரன்போல் இறங்கும்முன்
கோடிக்கடையில் பொடிவாங்கப்-பணம்
கொடுத்துத் தாத்தா அனுப்பிடுவார்!

வாசல் அருகே நண்பர்கள் — நான்
வருவேன் என்று கிளம்பும் முன்
ஆசை அக்காள் அழைத்திடுவாள்—ஒரு
அவசர வேலை எனக்கென்பாள்!

ஆடப் போகும்பொழுதெல்லாம்-தினம்
ஆயிரம் சொல்வார்- விடமாட்டார்!
பாடம் படிக்க உட்கார்ந்தால் — என்
பக்கம் எவரும் வரமாட்டார்!

-இளையவன்



காட்டினிலே ஒரு பள்ளிக்கூடம்

காட்டினிலே திறந்திருக்கு
புதிய பள்ளிக்கூடம் — அங்கு
கரடிக் குட்டிகள் தினம்படிக்கும்
நல்ல நல்ல பாடம்.

மரங்கொத்தித் தச்சுவேலை
பலவும் கற்றுக் கொடுக்கும் — சிறு
மந்திகளும் குந்தி அதைப்
பக்குவமாய்ப் படிக்கும்.

கணக்குசொல்லி கொடுப்பதற்கோ
வாத்தியாரே இல்லை — இதனால்
கணக்கில்லாமல் பழந் தின்ற
குரங் குக்குப் பெருந்தொல்லை.

தோப்புக்கரணம் போடச்சொன்னால்
என்னசெய்வ தென்றே — தினம்
தவறிடாமல வீட்டுப்பாடம்
படிக்கும் யானைக்கன்றே

காட்டுப்பள்ளிக் கூடந்தன்னில்
சேர்ந்திடுவோம் இன்றே — அங்கு
கலந்துவிளை யாடிப்பாடம்
படித்திடுவோம் நன்றே.

'ஞானம்பாடி'

அழகு பிறந்தது!

எங்கள் அண்ணன் முன்ஒருநாள்
"என்னுடன் வாடா" என்றழைத்தான்
"எங்கே?" என்றே பின்தொடர்ந்தேன்
எருக்கிலைப் புதரைச் சென்றடைந்தேன்

அங்கே இலைகளை உற்றுற்றே
அவனும் பார்த்தான் "என்ன?"
வென்றேன்

"இங்குபார்!" எனவே - நான்பார்த்தேன்
இலையில் பச்சைச் சிறுபுழுக்கள்!

புழுவுடன் இலையை அவன் ஒடித்தே
போட்டான் ஒருசிறு பெட்டியினுள்.
இளந்தளிர் இலைகள் சிலபறித்தே
இட்டான் மீண்டும் பெட்டியிலே.

விளங்கிட வில்லை எனக்கொன்றும்
வீட்டை மீண்டும் சென்றடைந்தோம்
புழுக்களைப் போட்ட பெட்டியினைப்
போய்அவன் பத்திரம் செய்துவந்தான்.

"எதற்கிது?" என்றேன். "சிலநாட்கள்
இருந்துபார், தெரியும்" எனச்
சொன்னான்.

நிதநிதம் காலையில் பெட்டியிலே
"நீபார்" என்றவன் காட்டிவந்தான்.


புதுப்புது முறையில் புழுபருத்து
மெதுவாய் ஓர்இடம் தங்கிற்று.
அதுமுதல் அங்கது தூங்கிற்று.
அதன்மேல் ஓர்உறை மூடிற்று.

உறைதான் எப்படி ? பசுங்கூடு !
இருந்தது அதன்மேல் பொற்கோலம் !
மறுநாள் பார்த்தோம்- அவ்விதமே.
மீண்டும் கண்டோம் - அப்படியே !


ஒருநாள் அண்ணன் எனைஎழுப்பி,
"ஓடிப் போய்ப்பார் பெட்டியிலே,
திற,போ!" என்றான் போய்த் திறந்தேன்
இருந்தது கண்கவர் பேரழகு !

பூவின் இதழைச் சிறகுகளாய்ப்
பூண்டது போல ஒருபூச்சி
தாவிப் பறந்தது வான்வெளியில் !
"சங்கதி இதுவா?" எனவியந்தேன்.

'அழகி'



சுவையான



உருளைக் கிழங்கு

ஆழ்.வே.ராமசாமி



அடுக்களை உள்ளில் எட்டிப் பார்த்த ராஜா, மூக்கினுல் காற்றை உள்ளுக்கு இழுத்து, "ஹப்பா...! உருளைக் கிழங்கு வறுவலின் வாசனை மூக்கைத் துளைக்கிறது!" என்றான்.

அவன் சொன்னது அப்பாவின் காதில் விழுந்தது. "இப்போது உலகில் பயிரிடப்படும் காய்கறிகளில் அதிக பங்கேற்பது உருளைக் கிழங்குதான். ஆனால், ஒரு காலத்தில் 'எனக்கு வேண்டாம், உனக்கு வேண்டாம்' என்று அதை வெறுத்து ஒதுக்கியதும் உண்டு" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

"அடடே! ஆச்சரியமாக இருக்கிறதே!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள் ராஜாவின் தங்கை மாலதி.

"உருளைக் கிழங்கு வறுவல், உருளைக் கிழங்கு ஃபிங்கர் சிப்ஸ், உருளைக் கிழங்கு போண்டா, உருளைக் கிழங்கு மசாலா, ஆகா, நினைக்கும்போதே எனக்கு வாயிலே ஜலம் ஊறுகிறது! ஆனால், இந்த அருமையான கிழங்கை ஏன் அப்பா வேண்டாம் என்று ஒதுக்கினார்கள்?" என்று கேட்டான் ராஜா.

"அந்தக் கதையை ஆரம்பத்திலிருந்தே சொல்கிறேன். இப்படி உட்காருங்கள்" என்றார் அப்பா.

ராஜாவும் மாலதியும் அவருக்கு எதிரே வந்து உட்கார்ந்தார்கள்.

அப்பா சொல்லத் தொடங்கினார்:

"1537 ஆம் ஆண்டு. தங்க வேட்டையாடுகிற ஒரு ஸ்பானிஷ்காரர் ஆண்டெஸ் மலைப் பிராந்தியத்தில் ஒரு கிராமத்துக்குத் தம் ஆட்களுடன் வந்தார்.

அப்போது அவர்களுக்குப் பசி வந்துவிட்டது. அவர்கள் அங்கே இருந்த செவ்விந்தியர்களின் குடிசைகளில் உணவைத் தேடினார்கள். பழுப்பு நிறத் தோலுள்ள உருண்டையான சிறிய கிழங்குகள் அங்கே இருப்பதைக் கண்டார்கள். அவற்றை வேகவைத்துச் சாப்பிட்டார்கள். ருசியாக இருந்தது.

"அந்தக் கிழங்குகளை அதிகமாகச் சாப்பிட்டு வந்த செவ்விந்தியர்கள் அவற்றைப் 'பாபா' என்று குறிப்பிட்டார்கள். அந்த ஸ்பானிய ஆட்கள் அவற்றைப் 'பட்டாடா' என்று குறிப்பிட்டார்கள். அதுதான் பின்னால், உலகம் முழுவதும் பரவி, 'பொட்டாடோ' என்று அழைக்கப்படும் உருளைக்கிழங்கு!"

"அது சரி அப்பா, அந்தக் கிழங்குகள்தான் ருசியாக இருந்தனவே, பின்னே ஏன் அவற்றைச் சாப்பிட மறுத்தார்கள்?" என்று கேட்டாள் மாலதி.

அப்பா சொன்னார்: "உருளைக்கிழங்கு கண்டுபிடிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு கழிந்த பிறகும் அது சரியானபடி உணவில் இடம் பெறவில்லை. உருளைக் கிழங்கு தொழு நோயையும் காச நோயையும், ரிக்கட்ஸ் என்னும் எலும்பு உருக்கி நோயையும் உண்டாக்குகிறது என்ற ஒரு தவறான கருத்து எப்படியோ மக்களிடையே பரவி விட்டது. அதனால் தான் பெரும்பாலோர் அதைச் சாப்பிடத் தயங்கினார்கள்.

"1588ஆம் ஆண்டு இரண்டு விதை உருளைக்கிழங்குகளைப் போப் ஆண்டவரின் ராஜப் பிரதிநிதி ஒருவர் வியன்னாவின் ராஜப் பிரதிநிதியாக இருந்த ஜூல்ஸ் சார்லஸ் டி. லீக்ளூஸ் என்ற தாவர இயல் அறிஞருக்கு அனுப்பினார். அவர் அந்த உருளைக் கிழங்குகளைப் பயிர் செய்தார். அவற்றில் சிலவற்றை மாமிசத்துடன் சேர்த்துச் சமைத்தார்கள். அவை சுவையாகவும், உடலுக்கு ஒத்துக் கொள்ளக் கூடியவையாகவும் இருப்பதாகக் கண்டார். பிறகு, ஐரோப்பாவில் உள்ள முக்கிய தோட்டச் சொந்தக்காரர்களுக்கெல்லாம் மாதிரியாக உருளைக் கிழங்குகளை அனுப்பி வைத்துப் பயிரிட்டுப் பார்க்கச் சொன்னார்.

"எனினும் உருளைக் கிழங்கை மக்கள் சரியாக மதிக்கவில்லை. சில பணக்காரர்கள், அது வெளி தேசத்து உணவு அதைச் சாப்பிடுவது ஒரு கௌரவம் என்ற எண்ணத்தில் பயன்படுத்தினார்கள். சில ஏழைகள் வயிற்றை எந்த ஆகாரத்தைக் கொண்டாவது நிரப்ப வேண்டுமே என்ற எண்ணத்தில் அதைச் சாப்பிட்டார்கள். அவ்வளவுதான்.

1744ல் ஜெர்மனியில் மகா ஃப்ரடெரிக் என்பவர் உருளைக்கிழங்கில் கேக்குகள் செய்து சாப்பிட்டார். நாட்டில் ஏற்பட்ட ஒரு பஞ்சத்துக்குப் பிறகு அவர் ஒரு பெரிய வண்டி நிறைய விதை உருளைக் கிழங்குகளையும், கூடவே படைவீரர்களையும் அனுப்பி விவசாயிகள் உருளைக் கிழங்குகளைப் பயிர் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர். அவருடைய அந்த ராணுவ நடவடிக்கைகளாலும், உணவுப் பற்றுக்குறையாலும் உருளைக்கிழங்குகளை ஜெர்மானியர் உணவுப் பொருளாகப் பயன்படுத்த வேண்டியதாயிற்று!

''பிரெஞ்சு வைத்தியரான அன்ட்டோய்ன் ஆகஸ்ட் பார் மென்டியர் என்ற படைக் கைதி ஃப்ரடெரிக்கின் சிறையில் இருந்தார். சிறையில் அவர் உருளைக் கிழங்கைத் தின்றவர். அவர் விடுதலையாகி பிரான்ஸுக்கு வந்ததும், பஞ்சத்தின் காரணமாக, தானியங்களுக்குப் பதிலாக உருளைக் கிழங்கைப் பயிர் செய்தார்.

''தானியங்களின் பற்றுக்குறையை நீக்க உருளைக்கிழங்கைப் பயிர் செய்யலாம் என்ற திட்டத்தை அவர் பதினைன்காம் லூயி அரசரிடம் தெரிவித்தார். அந்த அரசர், அவர் உருளைக் கிழங்கு பயிர் செய்வதற்காக பாரிஸுக்குப் பக்கத்தில் நூறு ஏக்கர் நிலத்தைக் கொடுத்தார்.

''அந்த உருளைக்கிழங்குச் செடிகள் வளர்ந்து அழகாகப் பூக்கத் தொடங்கின. அரசி மேரி அன்ட்டோய்னெட் அந்தப் பூக்களைக் கண்டு வியந்து அவற்றைப் பறித்துத் தன் கூந்தலில் அலங்காரமாகச் செருகிக் கொண்டு ஒரு வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டாள்!

''உருளைக்கிழங்கு பாரீஸில் பயிராகக் காரணமாக இருந்த அந்த அன்ட்டோய்ன் ஆகஸ்ட் பார்மெண்டியர் முக்கிய பிரமுகர்களை யெல்லாம் வரவழைத்து ஒரு விருந்து கொடுத்தார். வந்திருந்த பிரமுகர்களுள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பெஞ்சமின் பிராங்ளினும் ஒருவர். அந்த விருந்தில் உருளைக் கிழங்கைப் பல்வேறு முறைகளில் உணவுப் பொருளாகத் தயாரித்திருந்தார்கள். உருளைக் கிழங்கைத் தவிர வேறு எந்தப் பொருளும் கிடையாது!

''அன்ட்டோய்ன் ஆகஸ்ட் பார்மென்டியர், உருளைக்கிழங்கின் மீது மக்கள் கவனம் திரும்புவதற்கு ஒரு யுக்தி செய்தார். எந்தப் பொருளுக்குக் காவலும் மறைப்பும் இருக்கிறதோ, அதன்மீது மக்கள் கவனம் செல்லுவது இயற்கை. எனவே, அவர் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்பட்டிருந்த இடத்தில் உடுப்புக்கள் அணிந்த படைவீரர்கள் பாராக் கொடுத்துக் கொண்டிருக்கும்படி செய்தார். 'உருளைக் கிழங்குகள் திருடு போகாமல் இருப்பதற்காகத்தான் இந்தக் காவல்' என்று சொல்லிக் கொண்டார்கள். மக்களின் கவனம் உருளைக் கிழங்கின் மீது விழுந்தது.

''ஒரு நாள் இரவு, அந்தப் படைவீரர்களைக் காவலுக்கு வைக்கவில்லை. அவர் எதிர்பார்த்தபடியே அன்று இரவோடு இரவாக மக்கள் அந்தத் தோட்டத்திலிருந்த விதை உருளைக் கிழங்குகளைக் கவர்ந்து போய் விட்டார்கள். அவற்றைத் தங்கள் தோட்டங்களில் பயிர் செய்தார்கள்.



''அவர் இறந்தபோது அவரது கல்லறையில் உருளைக்கிழங்கு விதைக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது.

''இங்கிலாந்தில் முதல் முதலாகப் பிரபுக்கள்தாம் உருளைக் கிழங்கைச் சாப்பிட்டார்கள். பிறகே மற்றவர்களும் பின்பற்றினர்கள்.

''சுடப்பட்ட உருளைக்கிழங்குகள், லண்டன் தெருக்களில் கூவி விற்கப்பட்டன. குளிரான நாட்களில் கதகதப்பைத் தருவதற்காக லண்டன் பெண்கள் கையுறை அணிந்த தங்கள் கைகளில் உருளைக் கிழங்குகளை வைத்துக் கொண்டார்கள்.

''1719ல் ரெவரென்ட் ஜேம்ஸ் மாக்கிரிகர் என்பவர் பதினாறு குடியேற்றக் குடும்பத்தினரை வட அயர்லாந்தி

லிருந்து லண்டனுக்கு அழைத்துப் போனார். கூடவே விதை உருளைக் கிழங்குகளையும் கொண்டு போனார். அவர்கள் இரண்டரை ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழங்குகளைப் பயிரிட்டனர்.

''பெருவில் 1537-ல் ஸ்பானியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட உருளைக் கிழங்கு சிறியதாகவும் மஞ்சள் நிறத்துடனும் இருந்தது. இப்போதுள்ள வெண்மையான பெரிய உருளைக் கிழங்குகள் அதிலிருந்து உற்பத்தி செய்யப் பட்டவையே.''

''ஏன் அப்பா, உருளைக் கிழங்குகளை அதிகம் சாப்பிட்டால் ஊளைச் சதை போடும் என்று சொல்கிறார்களே, உண்மையா?'' என்று கேட்டான் ராஜா.

''ஆனால், ஆராய்ச்சியாளர்கள் உருளைக் கிழங்கு அதிகமாக ஊளைச் சதை போடுவதைத் தவிர்க்கிறது என்றுதான் கூறுகிறார்கள். நடுத்தரமான ஓர் உருளைக் கிழங்கு 100 கலோரி உஷ்ணம் தருகிறது. ஏழு ஆரஞ்சுச் சாறு தரும் உஷ்ணத்தை விட, ஒரு பெரிய ஆப்பிள் பழம் தருகிற உஷ்ணத்தை விட இது அதிகம். இரண்டு துண்டு முழுக் கோதுமை ரொட்டியில் உள்ளதைவிட வைட்டமின் பி-1 உருளைக்கிழங்கில் தான் அதிகம் இருக்கிறது. அதில் இரும்பும், சிறிய அளவில் செம்பும், மற்ற தாது உப்புக்களும் இருக்கின்றன. மேலும், உருளைக் கிழங்கை வேக வைக்கும்போது மிகச் சிறிய அளவில்தான் அதன் தோலிலிருந்து வைட்டமின்களும் தாது உப்புக்களும் சேதமடைகின்றன!'' என்று சொல்லி முடித்தார் அப்பா.

''உருளைக் கிழங்குதான் சுவையாக இருக்கிறது என்று நினைத்தேன். ஆனால், அதன் கதையும் சுவையாகத்தான் இருக்கிறது'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் மாலதி.



வேலை பார்க்கும் வாலில்லாக் குரங்குகள்

பார்பாரா டெர் என்ற அமெரிக்கப் பெண் மூன்று வாலில்லாக் குரங்குகளை வளர்த்து வருகிறாள். அவற்றுக்கு பார்பாரா எழுதக் கற்றுக் கொடுத்திருக்கிறார். தரையைக் கூட்டுவது, தண்ணீர் தெளிப்பது முதலான வேலைகளையும் அவை செய்கின்றன. வேலைக்குக் கூலியாக மாலை நேரத்தில் பார்பாரா அந்தக் குரங்குகளுக்கு சோடா, ஐஸ்கிரீம் ஆகியவற்றைக் கொடுக்கிறார்.

ஆதாரம்: 'ஆசியா மாகஸைன்' தகவல்: ஜானு





ரொட்டியும் வெண்ணெயும்

சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மனியில் இந்த விசித்திரமான வழக்கு விசாரணைக்கு வந்தது.

குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தவர் ஒரு குடியானவர். பார்ப்பதற்குக் கண்ணியமாகவே தோற்றம் அளித்தார். ஆனால் அவர் மீது உள்ளூர் ரொட்டிக் கடைக்காரர் ஒருவரைப் பல முறை ஏமாற்றியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவரைப் பார்த்து, ''அரசாங்க வழக்கறிஞர் கூற்றுப்படி நீர் பல நாட்களாக வேபர் எனும் ரொட்டிக் கடைக்காரருக்கு இரண்டு கிலோ வெண்ணெய்க்குப் பதிலாக ஒன்றேமுக்கால் கிலோ வெண்ணெயைக் கொடுத்து வந்துள்ளீர். இது உண்மையா?'' எனக் கேட்டார்.

அந்தக் குடியானவரோ ''அது உண்மையல்ல, ஐயா! நான் சரியான அளவு வெண்ணெயே அவருக்குக் கொடுத்து வந்துள்ளேன்'' என்று கூறினார்.

''அப்படியானால் உம் வீட்டில் சரியான தராசு உள்ளதா ?'' என்றார் நீதிபதி.

''நான் மிக நல்ல தராசு வைத்துள்ளேன், ஐயா !'' என்றார் குடியானவர்.

''சரி ! உம்முடைய எடைக் கற்கள் சரியானவைதானா?'' நீதிபதி மீண்டும் கேட்டார்.

''நான் சரியான எடைக் கற்களை வைத்திருந்தேன். ஆனால் கொஞ்ச நாட்களுக்கு முன்பு எனது சின்னப் பேரன் அவற்றை எங்கோ விளையாடித் தொலைத்து விட்டான், ஐயா!''

'' என்ன! எடைக் கற்கள் தொலைந்து போயும்கூட நீர் சரியான அளவு வெண்ணெயைக் கொடுத்து வர முடியுமா ?'' என்று நீதிபதி கேட்டார்.

''ஆம், ஐயா !''

''அதெப்படி முடியும்? சற்று விளக்கமாகச் சொல்லும்.''

குடியானவர் கூறினார்: '' ஐயா ! நான் பல ஆண்டுகளாகத் தினமும் இந்த வேபரின் கிடங்கில் ரொட்டி வாங்குவது வழக்கம்.''


நீதிபதி குறுக்கிட்டார். ''இந்த வழக்குக்கும், நீர் ரொட்டி வாங்குவதற்கும் என்ன சம்பந்தம்? நமக்கு வெண்ணெய்தானே பிரச்னை. அதைப் பற்றிக் கூறும்.''

''நீதிபதி அவர்களே! உண்மையில் நான் ரொட்டி வாங்குவதற்கும் இவ் வழக்குக்கும் சம்பந்தம் இருக்கிறது. நான் தினமும் இரண்டு கிலோ ரொட்டியை வேபரிடம் வாங்குகிறேன். அதைத் தராசில் ஒரு தட்டில் வைத்து, இன்னொரு தட்டில் அவருக்குத் தர வேண்டிய வெண்ணெயை நிறுத்துக் கொடுத்து வருகிறேன். எனவே, வெண்ணெயில் எடைக் குறைவிருக்க வழியில்லை'' என்றார் குடியானவர்.

அதோடு நில்லாமல், ''இதோ பாருங்கள், அவர் கடையில் வாங்கிய இரண்டு கிலோ ரொட்டி.'' எனத் தம் கைப் பையிலிருந்த ஒரு ரொட்டிப் பொட்டலத்தைக் காண்பித்தார்.

உடனே நீதிபதி ஒரு தராசு கொண்டு வரச் சொல்லி நிறுத்துப் பார்த்தபோது, அதன் எடை ஒன்றேமுக்கால் கிலோ மட்டுமே இருக்கக் கண்டார். நீதிமன்றத்தில் கூடியிருந்தவர்கள் அனைவரும் ரொட்டிக் கடைக்காரரைப் பார்த்து ஏளனம் செய்தனர்.

குடியானவர் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார். -எஸ். கந்தசாமி



மேலை நாட்டினருக்கு
மேலான நாகரிகம் தந்த நாடு

அண்ணனும் தங்கையும் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். சண்டைக்குக் காரணம், அவர்கள் அம்மா அன்று டிபனுக்குச் சேமியா செய்திருந்தாள். 'உனக்கு நிறைய, எனக்குக் கொஞ்சம்' என்று இருவருக்கும் மனத்தாங்கல். இந்தச் சமயத்தில் பரமேசுவரன் தாத்தா வந்தார் அங்கே.

''பசங்களா, என்ன சண்டை? இடியாப்பத்துக்கா இந்தப் பாடு?'' என்றார். ''இடியாப்பம் இல்லே..... சேமியாவாக்கும்'' என்றான் கிட்டு.


''நீ சேமியா என்கிறாய். மாட்டுக்கார மாடசாமி இடியாப்பம் என்பான். இத்தாலியர்கள் இதை ஸ்பகட்டி என்கிறார்கள். பெயர் வேறு. ஆனால் பொருள் ஒன்றுதான்'' என்றார் பரமேசுவரன் தாத்தா.

''சரி புரிந்து போச்சு... இப்போ நாம் இத்தாலி நாட்டுக்குப் போகப் போகிறோம். வாடா கிட்டு. அங்கே நிறைய ஸ்பகட்டி சாப்பிடலாம்'' என்றாள் பட்டு.

''இத்தாலி எங்கிருக்கிறது, தெரியுமா?'' என்று கேட்டார் தாத்தா.

''தெரியாமலென்ன? ஐரோப்பா கண்டத்தில் மத்தியதரைக் கடலுக்குள்ளே பூட்ஸ் போட்ட காலைப் போல் நீட்டிக் கொண்டிருக்குமே ஒரு நிலப் பரப்பு, அதுதான் இத்தாலி'' என்றான் கிட்டு.

'' சரியான உவமையோடு கூறினாய் கிட்டு. பூட்ஸ் கால் போல, மூன்று பக்கமும் நீல (மத்தியதரை)க் கடலால் சூழப்பட்டிருக்கிறது இந்த நாடு. இத்தாலியின் வடக்குப் பகுதியில் பனி மூடிய ஆல்ப்ஸ் மலைகள் அரணாக நிற்கின்றன. ஐரோப்பியர்களிடமிருந்து இத்தாலியர்களை இந்த ஐஸ் சுவர் பிரித்துவிடுகிறது. அதுமட்டுமல்ல, வடக்குப் பகுதியிலிருந்து வீசும் குளிர்மிகுந்தவாடைக் காற்றை இத்தாலிக்குள்வர








விடாமல் தடுத்தும் விடுகின்றன. இந்த மலைகள். அதனால் இத்தாலி கதகதப்பு உள்ள நாடாகவே இருக்கிறது'' என்றார் தாத்தா.

''ஆனால் உலகம் முழுவதிலிருந்தும் இத்தாலி நாட்டுக்கு மக்கள் மலை



ஏறவும், ஸ்கீ என்ற பனிச் சறுக்கு விளையாட்டை நாடியும் வருகிறார்கள் என்று படித்திருக்கிறேனே ?''

'' உண்மைதான். அது ஆல்ப்ஸ் மலைகள் உள்ள வடக்குப் பகுதியில் மட்டும் தான்.''

''இத்தாலியின் நடு மையத்திலும் கூட ஏதோ ஒரு மலைத் தொடர் இருப்பதாக ஞாபகம்.'' என்றாள் பட்டு.

''ஞாபகமாக்கும். பெயர் சொல்லத் தெரியவில்லை'' என்ற கிட்டு, அபினைன் (Apenine) மலைகள்தானே தாத்தா? என்று கேட்டான்.

''ஆமாம்....''

'' வெனிஸ், நேபிள்ஸ், ரோம், மிலான், வாடிகன், பிளாரன்ஸ் போன்ற சரித்திரப் புகழ்பெற்ற நகரங்களெல்லாம்கூட இத்தாலி நாட்டில் தானே இருக்கின்றன?'' என்று கேட்டாள் பட்டு.

''ஆமாம்.''

''தண்ணீர்.... தண்ணீர்... தண்ணீர் ! எங்கு திரும்பினாலும் தண்ணீர் தான். ஆனால் ஒரு பொட்டு நீரைக்கூட அதிலிருந்து குடிக்கக் கூடாது. குடிப்பதற்குப் பாட்டிலில் தனியாகத் தண்ணீர் விற்பனை செய்வார்கள். அது இந்த இத்தாலி நாட்டில்தானே தாத்தா ?''

''ஆமாம், வெனிஸ் நகரத்தில்.''

''பஸ், மோட்டார், டாக்ஸி இவைகளுக்குச் சக்கரம் கிடையாது. எல்லாம் படகுகள்தான். மோட்டார் கார், சைக்கிள் எதுவுமே இல்லாத ஒரு நகரம் இந்த இத்தாலியில்தான் இல்லையா ?''

''ஆமாம். வெனிஸ் நகரின் வீதிகள் அத்தனையும் நீரால் நிறைந்திருக்கும். நூற்றிப் பதினெட்டுத் தீவுகளால் ஆன நகரம் வெனிஸ். வீடுகளையும் சதுக்கங்களையும் இணைப்பவை நீர்வழிகள்தான். போக்குவரத்துக்குக் கோண்டுலாஸ் என்ற படகுகள்தான்.''



நேபிள்ஸ் நகரத்துக் குறுகலான வீதி - வெயிலில் உலரும் துணிகளே கொடிகள் !

''அதிகப் பள்ளிக்கூடங்கள் கிடையாதாகையினால் 'ஷிப்ட்டு' முறையில் குழந்தைகள் படிக்கிறார்களாமே அதுவும்...''

'' இந்த வெனிஸ் நகரத்தில்தான் ! அது சரி, இத்தாலிக்குப் போகாமலே இங்கிருந்தபடியே எல்லா விஷயங்களையும் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுவிடப் பார்க்கிறீர்களா ?'' என்று கேட்டார் தாத்தா.

''இல்லை, இல்லை.... இதோ நாங்கள் கிளம்பத் தயார். ஏதோ எங்களுக்கும் இத்தாலியைப் பற்றிக் கொஞ்சம் தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளவே இப்படி அடுக்கிறோமாக்கும்'' என்றான் கிட்டு. தாத்தா மந்திர மெழுகை எடுத்துக் குழந்தைகளின் புருவத்தில் தீற்றினார். அடுத்த விநாடி மூவரும் இத்தாலியின் இருதயப் பகுதியான அபனைன் மலைப் பிரதேசத்தில் இருந்தார்கள்.

கிட்டு அந்த மலைப் பிரதேசத்தில் பயிர் செய்திருக்கும் நேர்த்தியைக் கண்டு பிரமித்துப் போனான்.

''தாத்தா, ஒரு துண்டு நிலப் பரப்பைக்கூட வீணாக்காமல் படிப் படியாக எத்தனை அழகாக இங்கு நிலத்தைப் பயிரிடப் பயன்படுத்தி இருக்கிறார்கள்?''

''இந்தப் படிகள் கிராமத்தை நோக்கிப் போகின்றன. அதோ தூரத்தில் சிவப்பாகத் தெரிகின்றதே அவையெல்லாம்தான் கிராமத்து ஓட்டு வீடுகள். ஆரஞ்சுச் சிவப்பாகத் தெரிகிறதே அதெல்லாம் தக்காளிப் பாத்திகள். இத்தாலியர்களின், உணவில் முக்கிய பங்கு வகிப்பது தக்காளிப் பழம்தான். ஐரோப்பாவில் உள்ள சந்தைகளுக்கெல்லாம் இங்கிருந்து தக்காளிப் பழங்கள் போகின்றன. 'ஸ்பகட்டி ஸாஸ்' என்ற உணவுக்கு டின்களில் அடைத்த தக்காளிப் பழச் சாற்றைப் பயன்படுத்துகிறார்கள். அதோ, அங்கே கருஞ்சிவப்பாகத் தெரிகிறதல்லவா, அதெல்லாம் ஆப்பிள் மரச் சோலைகள். சாம்பல் பூத்த பசுமையாகத் தெரிவதெல்லாம் ஆலிவ் மரங்கள். புகழ்பெற்ற ஆலிவ் எண்ணெய் இங்கிருந்துதான் கிடைக்கிறது. மேற்குப் பகுதியிலே ஊதா நிறமாகத் தெரிவதெல்லாம் திராட்சைத் தோட்டங்கள்'' என்று உற்சாகமாக விளக்கிக் கொண்டு போனார் தாத்தா.

'' அடேயப்பா ! ஒரே வர்ண ஜாலமாக இருக்கிறதே, இந்த நாடு '' என்றான் பட்டு.

''கலர்ஃபுல் லாண்டு'' என்றே இத்தாலிக்கு ஒரு பெயர். இங்குள்ள மக்களின் உடையும்கூட கலர்ஃபுல்லாக இருக்கும்'' என்றார் தாத்தா.

'' இத்தாலியர்கள் சிறந்த உழைப்பாளிகள் என்று படித்திருக்கிறேன்.''

''அபனைன் மலைப் பிராந்தியத்தில் விவசாயத்துக்கு யந்திரங்கள் மிகச் சொற்பமாகத்தான் பயன்படுத்துகிறார்கள். மலைப் பிரதேசத்தில் செழிப்பாகப் பயிர் பச்சை வளர மக்கள் பாடுபட்டு உழைக்கிறார்கள். ஆல்ப்ஸ் மலைப் பிரதேசத்தின் தென் பகுதியில் 'போ' பள்ளத்தாக்கு உள்ளது. இத்தாலியின் வளம் மிக்க பிரதேசம் இதுதான். 'போ

நதி பாய்வதினல் இந்த மண்ணுக்கு செழுமையும் சூரிய வெப்பத்தினல் ஆரோக்கியமும் கிடைக்கின்றன. இந்தப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கான மின் விசையையும் இந்தப் போ நதி வழங்குகிறது. கிட்டு, போ நதி கரையில் உள்ள பிரபலமான நகரங்கள் என்னென்ன தெரியுமா ?''

''தெரியுமே! மிலான், டூரின் என்பவை பிரபலமானவை. இங்குள்ள தொழிற்சாலைகளிலிருந்துதான் பிரபலமான மோட்டார்கள், ஸ்கூட்டர்கள், தையல் யந்திரங்கள் எல்லாம் உலகச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றன'' என்றான் கிட்டு.

''இத்தாலியின் வடக்கே உள்ள ஆல்ப்ஸ் மலைகளைப் பல இடங்களில் குடைந்து ஸ்விட்ஸர்லாந்து, ஆஸ்திரியா பிரான்ஸ் ஆகிய அண்டை நாடுகளோடு குகைப்பாதைகள் இணைக்கின்றன. சமீபத்தில் 'மாண்ட் பிளாங்க' என்னும் இடத்தில் குடைந்த டன்னலின் நீளம் ஏழு மைல்கள். இது பிரான்ஸோடு இணைகிறது'' என்றார் தாத்தா.

''மலையைக் குடைந்து செல்லும் இந்த டன்னல் வழியே ரயிலில் பிரயாணம் செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது'' என்றாள் பட்டு.

''மிலான் நகரம் ரொம்பச் சுறுசுறுப்பான நகரம். வாருங்கள், முதலில் அங்கு போகலாம்'' என்று அவர்களை மிலான் நகரத்துக்கு அழைத்துப் போனார். மக்கள் எதையோ நோக்கி இங்கும் அங்கும் ஓடிக் கொண்டே இருந்தார்கள். ''எத்தனை பரபரப்பு, எத்தனை வேகம்'' என்று வியந்து போனான் கிட்டு.

''வேகத்துக்கும் ரேஸுக்கும் பெயர் பெற்ற நகரம்தான் இந்த மிலான். மோட்டார் ரேஸ், சைக்கிள் ரேஸ் எல்லாம் இங்கு அடிக்கடி நடைபெறும்'' என்றார் தாத்தா.

''மிலான் நகரில் பிறக்கும் பையன்கள் நடக்க ஆரம்பித்தவுடனே சைக்கிள் விட ஆரம்பித்துவிடுவார்கள். வயது வந்ததும் ஆண்டுதோறும் நிகழும், ''தி கோல்டன் வீல்'' என்ற சைக்கிள் ரேஸில் பங்கு கொள்ளவும் தவறமாட்டார்கள். என்று ஒரு செய்தியில் படித்தேன். அது உண்மைதான் என்பதை இங்கு வீதியில் பறக்கும் சைக்கிள்கள் மெய்ப்பிக்கின்றன'' என்றான் கிட்டு.

''குதிரை லாடம் போன்ற அமைப்பில் இத்தாலியில் ஒரு துறைமுகம் உண்டு. இங்கு பல்வேறு நாட்டுக் கப்பல்கள் எப்போதும் மொய்த்துக் கொண்டிருக்கும். இத்தாலியின் பிரபலமான துறைமுகங்களுள் ஒன்று இது. இந்தப் பிராந்தியத்தில் பிறக்கும் பையன்களெல்லாம் அநேகமாக மாலுமிகளாகத்தான் போவார்களாம். இந்தத் துறைமுகத்தின் பெயர் தெரியுமா ?'' என்றார் தாத்தா.

''க்விஸ்' புரோகிராம் நடத்துவது போலக் கேள்வி கேட்டால் இங்கு யாருக்குத் தெரியுமாம் ?'' என்று சிணுங்கினாள் பட்டு.

பேத்திக்குப் பாட்டி போரிட்ஜ் என்னும் உணவை ஊட்டுகிறாள்.





அட்டையில்:

தண்டியிலே எடுத்து வந்த உப்பு — இதைத்
தடுத்த தெல்லாம் வெள்ளைக் காரன் தப்பு.
மண்டியிலே வாங்க யாரும் இல்லையே ! — நான்
மாட்டி — விட்டேன், சுமக்கும் வரை தொல்லையே !!

— குடுக்கையார்

வண்ணப்படம்: துரைலிங்கம்

''உனக்குத் தெரியாவிட்டால் அதற்காக 'க்விஸ்' புரோகிராமையே வெறுப்பதா என்ன? நான் சொல்லட்டுமா ?'' என்றான் கிட்டு. சரித்திர பூகோளப் பாடங்களில் புலியாயிற்றே அவன்.

''இத்தாலியின் வட மேற்குப் பகுதியில் உள்ள புகழ்பெற்ற துறைமுகம் ஜெனோவா தானே ?''

''ஜெனீவாவா? ஜெனோவாவா ?'' என்று குறுக்கிட்டாள் பட்டு. தாத்தா சிரித்துவிட்டார்.

''வாயை மூடிக் கொண்டிருக்கக் கூடாதா ? உன் அசட்டுத்தனமும் வெளியே தெரியாமலிருக்குமே பட்டு. ஜெனீவா இருப்பது ஸ்விட்ஸர்லாந்தில். இது ஜெனோவா, இத்தாலி நாட்டுத் துறைமுகம்......''

''ஒரு காலத்தில் இந்த ஜெனோவாத் துறைமுகத்தில் உட்கார்ந்தபடி கடலைப் பார்த்துக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத அந்நியக் கடல்களைப் பற்றிக் கற்பனையில் மூழ்கி இருந்தான் ஒரு சிறுவன். பிற்காலத்தில் மிகப் பிரபலமான மாலுமியாகிப் புதிய உலகங்களைக் கண்டான். அவன்தான் கிறிஸ்தஃபர் கொலம்பஸ். அவன் பிறந்த இடம் இந்த ஜெனோவாதான்'' என்ற தாத்தா பட்டுவை உற்சாகப்படுத்த எண்ணி, ''பட்டு, உனக்கு அழகிய கண்ணாடிச் சாமான்கள் என்றால் பிடிக்குமல்லவா, சிவப்பு, மஞ்சள், பச்சை, வண்ணங்களில் அற்புதமான கண்ணாடிப் பொருள்களைத் தயாரிக்கும் நகரம் இத்தாலியில்தான் இருக்கிறது. அதன் பெயர் என்னவென்று சொல்லு, பார்க்கலாம்!'' என்றார்.

''இத்தாலியின் மேற்குக் கரையில் உள்ள வெனிஸ் நகரம்தானே அது?'' என்றாள்.

''கரெக்ட். கொலம்பஸ் பிறப்பதற்கு முன்னாலே இந்த வெனிஸ் நகரத்திலிருந்து ஒரு புகழ்பெற்ற யாத்திரீகன் சீனாவுக்கு விஜயம் செய்தான். சீனாவுக்குப் போன முதல் ஐரோப்பியன் இவன்தான்.''

''மார்கோபோலோவைத் தானே குறிப்பிடுகிறீர்கள்?'' என்றாள் டக்கென்று பட்டு.

''அவரேதான். சீனாவிலிருந்து அவர் அறிந்து வந்த பல விஷயங்களில் ஒன்று கண்ணாடிக் குழம்பை ஊதி அழகிய பாத்திரங்களாகச் செய்யும் கலை. வெனிஸ் நகரத்தில் உள்ளவர்கள் இன்றைக்கும் அற்புதமான கண்ணாடிச் சாமான்களைச் செய்வதில் வல்லவர்கள். வெனிஸ் நகர வீதிகள் கால்வாய்கள் தாம் என்பது உங்களுக்குத் தெரியும். கோண்டோலா என்று அழைக்கப்படும் படகுகள்தான் போக்குவரத்துக்கு. இந்தப் படகுகளை நிறுத்துவதற்கு — கட்டிப் போட — நம் ஊர்களில் உள்ள டாக்ஸி ஸ்டாண்டைப் போல் சிவப்பும் வெள்ளையும் தீட்டிய கம்பங்கள் வாய்க்கால்களில் நட்டிருப்பார்கள். ஆண்டுதோறும் வெனிஸ் நகரக் கால்வாய்களில் படகு ஓட்டும் போட்டி நடக்கும். இது பிரபலமானது. கோண்டோலா என்ற படகை ஓட்டும் கோண்டோலியர் இனிமையாகப் பாடி பிரயாணிகளை மகிழ்விப்பதில் சமர்த்தர்கள்.

''வெனிஸ் நகருக்குத் தெற்கே இத்தாலியின் மேற்குக் கடற்கரையில் புகழ்பெற்ற நேபிள்ஸ் நகரம். 'இறப்பதற்கு முன்பு 'நேபிள்ஸ் நகரத்தைப் பார்' என்று ஒரு பழமொழியே ஆங்கிலத்தில் உண்டு. (See Naples and die) நேபிள்ஸ் நகரவாசிகள் இனிமையாகப் பாடக் கூடியவர்கள்.

''தென் இத்தாலியில் வெப்பமாக இருக்கும். ஒரு காலத்தில் இங்கு அடர்ந்த காடுகள் இருந்தன. காடுகளை அழித்து விட்டதால் இந்தப் பகுதி பயனற்றதாகி விட்டது. ஒரே சதுப்பு நிலமான இதில் எதுவுமே பயிரிட முடியாது.''

''தாத்தா ! இத்தாலி நாட்டைச் சேர்ந்ததுதானே சிசிலி, சார்டீனியா ஆகிய தீவுகள்?'' என்று கேட்டான் பட்டு.

''ஆமாம்... இத்தாலி என்ற பூட்ஸின் விரல் முனையில் ஒட்டிக் கொண்டிருக்கும் தீவுதான் சிசிலி. இங்குள்ள மலைகளில் வெள்ளாடு, செம்மறியாடுகளை ஏராளமாக வளர்க்கிறார்கள். பால், பாலடைக் கட்டி, மாமிசம் இவைகளுக்காக இவ்வாடுகள் பயன்படுகின்றன. சார்டீனியா தீவிலும்

ஆடுகள் ஏராளம். எலுமிச்சையும் ஆரஞ்சும் ஏராளமாகப் பயிராகின்றன. ஸார்டைன், டூனா என்ற மீன் வகைகள் இவ்விரு தீவுகளைச் சுற்றிலும் ஏராளமாகக் கிடைக்கின்றன.''

''சிசிலித் தீவில்தானே 'எட்னா' எரிமலை இருக்கிறது?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம்..... அது சரி கிட்டு, இத்தாலியின் தலைநகரம் ரோம். இல்லையா? இது மகோன்னதமான ரோமானிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக இருந்தது, ஒரு காலத்தில். டைபர் நதியின் இரு மருங்கிலும் இத்தாலியின் தலைநகரமும் மிகப் பெரிய நகரமுமான ரோம் பரந்து கிடக்கிறது. இந்த நகரம் தோற்றுவிக்கப்பட்டது கி. மு. 753ல். இன்றைய ரோம், உலகம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் தலைமைப் பீடம். ரோம் நகரைப் பார்த்தபடி ஒரு மலை மீது இருக்கிறது வாடிகன் நகரம். போப்பாண்டவரின் இருப்பிடம். இது ஒரு தனிநாடு. ஏழு மலைகளின் மீதாகக் கட்டப்பட்டுள்ள ரோம் நகரின் கிழக்குப் பகுதியில் நவீனக் கட்டடங்களும் அரசாங்க அலுவலகங்களும், அங்காடிகளும், அரங்குகளும், அன்னசாலைகளும் — ரொம்பக் கலகலப்பாக இருக்கும். திரைப்படம் எடுப்பது இங்கு ஒரு சிறந்த தொழில். புராதனமான கட்டடங்களையும் இடிபாடுகளையும் கொண்டது ரோம். ஜூலியஸ் ஸீஸர் என்ற பெயரைப் கேள்விப்பட்டிருப்பாயே. ரோமானிய சக்கரவர்த்தியான இவர் இங்கிலாந்தையும் வென்று தம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். ரோமானியர்கள் மகோன்னதமாக வாழ்ந்து வீழ்ந்த வரலாறுகளை இங்குள்ள வழி காட்டிகள் வக்கணையாக விவரிப்பதைக் கேட்டு மகிழலாம். இடிபாடுகளைக் கண்டு வியக்கலாம். ரோமானியர்களின் பாஷை இலத்தீன். நாகரீகத்தில் மேம்பட்டு விளங்கியவர்கள் ரோமானியர்கள். இவர்களிடமிருந்துதான் மேலை நாட்டினர் நாகரிகம் கற்றனர் என்ற பெருமை இத்தாலிக்கு உண்டு.

''காலோசம் என்ற விளையாட்டு மைதானம் மிகப் புராதனமான நினைவுச் சின்னம். கலையும் கலாசாரமும் சித்திரமும் ஒவியமும் வளர்ந்து வளம் பெற்ற பூமி இத்தாலி. மைக்கேலங்கலா என்ற அமர ஓவியனின் சித்திரங்களையும் சிற்பங்களையும் வாடிகன் நகரில் உள்ள மாதா கோயில்களின் விதானத்தில் காணலாம். காரரா என்னும் இடத்தில் வெள்ளைச் சலவைக் கல் ஏராளமாகக் கிடைக்கிறது. ஃபிளாரன்ஸ் முதலிய நகரங்களில் சலவைக் கல் சிலைகள் ஏராளம். கலைகள் மட்டுமல்லாமல் விஞ்ஞானமும் வளர்த்த இடம் இத்தாலி. பல புதிய கண்டு பிடிப்புகளை உலகுக்குத் தந்த பல மேதைகள் தோன்றிய நாடு இத்தாலி. புகழ்பெற்ற சாய்ந்த கோபுரம் உள்ள பிஸா நகரம் இருப்பது இங்குதானே!

''இத்தாலி இப்படி நாகரிகத்தில் மேம்பட்டுச் செழிப்பாக இருப்பதைக் கண்டு அண்டை நாடுகள் பொறாமை கொண்டன. இத்தாலியின் செல்வத்



தைக்கொள்ளையிட முயன்றன. இத்தாலி அடுத்தடுத்துப் பல யுத்தங்களைக் காண வேண்டி இருந்தது. பிரான்ஸும் ஸ்பெயினும், ஆஸ்திரியாவும் இத்தாலியில் ஆதிக்கம் செலுத்திய காலங்களும் உண்டு. நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை பற்பல மாகாணங்களாக இருந்த இத்தாலி 1861ல்தான் ஓர் அரசனின் கீழ் ஒரே நாடாக ஆயிற்று. ஆஸ்திரியாவிடமிருந்து விடுதலை பெறப் போராடின வீரர் கரிபால்டி என்பவர். இவர் கீழ் போராடிய வீரர்களுக்குச் செஞ்சட்டையினர்கள் (Red Shirts) என்று பெயர்.

''இதன் பிறகும் அதன் கஷ்டம் தீர வில்லை. 1922ல் பெனிட்டோ முஸோ லினி என்ற சர்வாதிகாரியின் ஆதிக்கத்தில் இத்தாலி வந்தது. ஹிட்லரோடு சேர்ந்து கொண்டு இரண்டாவது உலகப் போரில் இத்தாலியை ஈடு படுத்திப் படுதோல்வி அடைந்து நாட்டையும் பல கஷ்டங்களுக்கு ஆளாக்கினார் முஸோலினி. யுத்தத்துக்குப் பிறகு அமெரிக்க உதவியினால் மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டு வருகிறது இந்த நாடு. உழைப்பாளி மக்களாதலால் உற்சாகம் குன்றாமல், யுத்தத்தினால் படுமோசமான தங்கள் நாட்டைப் புனர் நிர்மாணம் செய்வதில் முழுமூச்சுடன் ஈடுபட்டார்கள். என்ன உழைத்தாலும் ஐம்பது மிலியன் ஜனத்தொகையைக் கொண்ட இந்தச் சிறு நாட்டு மக்களுக்குப் போதிய உணவு உற்பத்தியாவதில்லை.

''அழகான கூடைகள், மண் பாண்டங்கள், தோல் சாமான்கள், கண்ணாடிச் சாமான்கள் மற்றும் பல கலைப் பொருள்களைச் செய்து குவிக்கிறார்கள், இத்தாலிய மக்கள். அமெரிக்காவில் இவற்றுக்கு நல்ல கிராக்கி. ஃபியட் கார் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் இல்லையா? இது இத்தாலியத் தயாரிப்புத்தான். அங்கு இதற்கு 'மிக்கி மௌஸ்' என்று பெயர். வெகு வேகமாக ஓடக்கூடிய சின்னக் கார். லாம்ப்ரெட்டா, வெஸ்பா ஆகிய ஸ்கூட்டர்கள் இத்தாலியர்களின் தயாரிப்புக்கள்தாம். உலகம் முழுவதும் நாகரீகமான ஆடைகளைத் தயாரிப்பதில் புகழ்பெற்றவர்கள் ரோம் நகரில் உள்ளவர்கள். இங்கிருந்து டிசைன் செய்து தயாராகும் ஆடைகளுக்கு உலகம் முழுவதும் வரவேற்புக் கிடைக்கிறது.

''இத்தாலியக் குழந்தைகள் படிப்பது நவம்பரிலிருந்து ஏப்ரம் மாதம் வரைதான். வருஷத்தில் ஆறு மாதம். மற்ற ஆறு மாதங்களில் ஏதாவது வேலை செய்து சம்பாதிப்பார்கள். சின்னக் குழந்தையிலேயே கிண்டர்கார்டனில் சேர்த்துவிடுவார்கள். பெண் குழந்தைகளுக்கு 'பிங்க்' வண்ண ஆடை, பையன்களுக்கு நீலம். பள்ளியில் வெள்ளையும் கறுப்புமான யூனிபாரம்கள். பதினாறு வயதில் அநேகமாகப் பள்ளியை விட்டு வேலைக்குப் போய்விடுகிறார்கள். உயர்நிலைப் பள்ளி, கல்லூரி வரை படிப்பது கொஞ்சம் பேர்தான்.

''விழாக்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் புகழ்பெற்றது இத்தாலி. இத்தாலியர்கள் அநேகமாக எல்லாரும் ரோமன் கத்தோலிக்கர்கள்தாம். ஆகவே இவர்களுடைய விடுமுறை விழாக்களெல்லாம் மதச் சார்புடையதாகவே இருக்கும். வாண வேடிக்கை, ஊர்வலம், நடனம், எல்லாம் இவர்களிடம் சர்வ சகஜம். பொம்மலாட்டம் இங்கு புகழ்பெற்ற ஒன்று. கிராமத்துக்குக் கிராமம் இதைக் காணலாம்.

''ஐரோப்பாவிலேயே மிகப் பழைமையான ஒரு ஸ்டேட் இத்தாலிக்குள்ளேயே இருக்கிறது. இன்னமும் அது சுதந்திரத்துடன் தனித்து விளங்குகிறது. ஸான் மரீனோ என்பது சுதந்திரக் குடியரசு. கோட்டைகளால் சூழப்பட்ட இந்த நாடு அட்ரியாடிக் கடலை நோக்கி உள்ளது. பதின்மூன்றாயிரம் ஜனத்தொகை. கோதுமையும் திராட்சையும் பயிர் செய்கிறார்கள்.

இத்தாலியில் நல்ல அரிசி விளைகிறது என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். நெல் சாகுபடிக்கு ஏற்ற சீதோஷ்ணநிலை கொண்டது இத்தாலி.''

''அதனால்தான் இங்கு சேமியா தயாரிக்கிறார்களா?'' என்றாள் பட்டு.

'' கோதுமை, அரிசி மாவுகளைக் கொண்டு உணவு தயாரிப்பதில் சமர்த்தர்கள் இத்தாலியர்கள்.''

''சைப்ரஸ் ஆலிவ் மரங்களுக்குப் புகழ் பெற்றது இத்தாலி. அதோ... இனிமையான இசை காற்றில் மிதந்து வருகிறது இல்லையா ? சங்கீதம் அன்றாட அலுவல்களில் ஒன்று இவர்களுக்கு. உழைப்பின் அயர்வைப் பாடியே மறப்பவர்கள் இத்தாலியர்கள். சந்தோஷமாக இருப்பவர்கள்தான் பாடுவார்கள். ஆகவே, இத்தாலியர்கள் சந்தோஷமாகவே இருக்கிறார்கள். தபால்காரர் பாடிக் கொண்டே கடிதங்களை விநியோகிப்பார். மலைப் பாதையில் பொதி கழுதை மீது விவசாயி கீதம் இசைத்துக்கொண்டு ஊர்ந்தபடியே செல்லுவான். பள்ளிக்குச் சைக்கிளில் போகும் குழந்தைகள் பாடிக் கொண்டே போவார்கள். நீலக் கடலில் வலை வீசும் செம்படவனும் பாடிக் கொண்டேதான் மீன் பிடிப்பான்'' என்றார் தாத்தா.

''பெல்லா... பெல்லா...'' என்றான் கிட்டு.

''அதென்ன பெல்லா ?'' என்றாள் பட்டு.

''பெல்லா என்றால் அழகு...நாமும் இந்த அழகிய வர்ண ஜாலங்கள் கொண்ட கதகதப்பான இத்தாலியை விட்டுப் பாடிக் கொண்டே ஊர் திரும்புவோம்'' என்றார் பரமேசுவரன் தாத்தா.

பனிக்கட்டி

சுந்தரி



ஒரு நாட்டில் தன் குடிமக்களைக் கண்ணாகக் கருதும் அரசர் ஒருவர் ஆட்சி செய்து வந்தார். மக்களின் குறைகளை அடிக்கடி கேட்டறிவது அவர் வழக்கம். ஒரு நாள் அரசர் மந்திரியை நோக்கி, ''இப்போது ஏழைகள் எப்படி இருக்கிறார்கள்?'' என்று ஆவலுடன் கேட்டார்.

''அரசே! அவர்கள் எப்போதும் போலவே துன்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்!'' என்றார் மந்திரி.

''நீங்கள் ஏழைகளுக்கு உதவி செய்கிறீர்களா ?'' என்று மற்ற மந்திரி பிரதானிகளை நோக்கி அழுத்தமாக வினவினார் அரசர்.

''ஆமாம், அரசே ! தங்கள் கட்டளைப்படி ஏழைகளுக்காக இருபதினாயிரம் பொற்காசுகள் செலவிடப்பட்டிருக்கின்றன'' என்றார் நிதி மந்திரி.

''ஆ! அப்படியா ? அப்படியிருந்தும் ஏழைகள் இன்னமும் துன்பப்படுகின்றார்களே, அது ஏன்?'' என்று ஆத்திரமாகக் கேட்டார் மன்னர்.

அவருடைய கேள்விக்குப் பதில் வரக் காணோம்.

சில விநாடிகள் கடந்தபின் சபையின் ஒரு மூலையில் ஒதுங்கி நின்ற ஓர் ஏழைக் கிழவன் அரசரின் முன் வந்தான். பணிவுடன் வணங்கினான். ''அரசே! தங்கள் கேள்விக்குப் பதில் அளிக்க விரும்புகிறேன்'' என்று சொன்னான்.

''சொல்லு!'' என்றார் அரசர்.

''இப்பொழுது எனக்கு ஒரு சிறிய, 'பனிக்கட்'டித் துண்டு வேண்டும், அரசே !'' என்றான் கிழவன்.

அரசருக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்றாலும் பனிக் கட்டித் துண்டு ஒன்று கொண்டு வந்து தரும்படி வீரன் ஒருவனுக்குக் கட்டளையிட்டார்.

ஓரிரு கண நேரத்தில் அவன் பனிக் கட்டித் துண்டு ஒன்றைக் கொண்டு வந்து, கிழவனிடம் அளித்தான்.


கிழவன், பெரிய 'மாங்கொட்டை' அளவுள்ள அந்தப் பனிக் கட்டியை அருகிலிருந்த அதிகாரியிடம் கொடுத்து, ''இதை உங்களுக்குப் பக்கத்திலிருப்பவரிடம் கொடுங்கள். அவர் அவருக்குப் பக்கத்தில் இருக்கும் அதிகாரியிடம் கொடுக்கட்டும். இது இவ்வாறே அரசரின் கைக்குப் போகட்டும்'' என்றான்.

கிழவனுடைய ஏற்பாட்டைக் கண்டு ஏதும் புரியாமல் சபையில் உள்ளவர்கள் விழித்தார்கள். ஆனாலும் கிழவனின் விருப்பப்படியே பனிக் கட்டித் துண்டை ஒவ்வோர் அதிகாரியாக வாங்கிக் கொடுத்துக் கொண்டே போனார்கள். கடைசியில் முதல்மந்திரியிடம் கொடுக்கப்பட்ட பனிக்கட்டி, பலர் கைபட்டுக் கரைந்து போய், 'நெல்லிக்காய்' அளவு இருந்தது. அந்தச் சிறிய பனிக் கட்டித் துண்டை மந்திரி அரசரிடம் கொடுத்தார். அரசர் அதை வாங்கிப் பார்த்து விட்டு, கிழவனை ஏறிட்டு நோக்கினார்.

''பெரியவரே, உங்களின் இந்தப் பனிக்கட்டி விளையாட்டுக்குப் பொருள் என்ன?'' என்று குறுநகையுடன் கேட்டார் அரசர். அதற்குள் அவர் கையிலிருந்த பனிக் கட்டி நீராக உருகி மறைந்துவிட்டது. கிழவர் அரசரைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

''கருணையுள்ள அரசே! தாங்கள் ஏழைகளுக்கு உதவி செய்ய விரும்பியதை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால்....'' கிழவர் இங்கு சற்று நிறுத்தினார். பின்பு, தொடர்ந்தார். ''தங்கள் கட்டளைப் படி செய்யும் உதவிகளை ஏழைகளால் முழுமையாகப் பெற முடியவில்லை. மாங்கொட்டை அளவான பனிக்கட்டி, கை மாறிக் கை மாறிக் கரைந்து, கடைசியில் தங்களிடம் கொடுக்கப் படும் பொழுது நெல்லிக்காய் அளவு ஆகிப் பிறகு அதுவும் உருகி ஒழிந்தது. அது போலவே அரசாங்க அதிகாரிகளால் கொடுக்கப்படும் உதவிகள் யாவும் ஒவ்வோர் அதிகாரியிடமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து பயனில்லாமல் போகின்றன. அதனால் ஏழை மக்கள் எப்போதும்போல் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று விளக்கினார்.

ஓ, அப்படியா?



பட்டு: வண்டே, வண்டே, உன் பேர் என்ன? பார்ப்பதற்கு விநோதமாக இருக்கிறதே, உன் தோற்றம்? அதென்ன உன் முதுகின் மீது நீர்க் கொப்பளம் போல.

வண்டு: என் பெயரே அந்தக் கொப்பளத்தோடே சம்பந்தப்பட்டது தான். எனக்குப் பிளிஸ்டர் பீட்டில் (Blister Bettle) என்று பெயர். என் முதுகின் மீதுள்ள கொப்பளத்தினுள் நீர் நிறைந்திருக்கும். உருவத்தில் மட்டும் அல்லாமல் நான் வளர்ச்சி பெறுவதும் விநோதமான முறையில்தான்.

பட்டு: அதென்ன விநோதம், கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லேன்.

வண்டு: லார்வா என்றால் உனக்குத் தெரியும். முட்டையிலிருந்து வெளி வந்தவுடன் காணப்படும் புழு நிலை. இந்தப் பருவத்தில் எங்கள் உணவு என்ன தெரியுமா? வெட்டுக் கிளிகளினுடைய முட்டைகள்தாம்.

பட்டு: அதெப்படி? புழு நிலையில் உள்ள உனக்குப் பறக்க இறக்கைகளோ நடக்கக் கால்களோ இருக்காதே. உன்னால்......?

வண்டு: அவசரப்படுகிறாயே! என்னால் அந்த நிலையில் இங்கும் அங்கும் போய் வெட்டுக் கிளியோட இருப்பிடத்தைத் தேடிப் போக முடியுமா? ஆகவே பொறுமையோடு காத்திருப்பேன். என் அருகாக ஒரு வெட்டுக் கிளி வருவதற்காக. அப்படி ஒரு தத்துக் கிளி வந்ததும் அதன் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுவேன்.

பட்டு: உணவு அளிக்கும் அன்னபூரணியாயிற்றே! காலைப் பிடித்தால் என்ன?

வண்டு: இறக்கைகளே இல்லாமல் இப்படி வெட்டுக்கிளியோடு ஆகாயத்தில் பறக்கும் நான் அது முட்டையிடும் சமயத்தில் அதை விட்டுவிட்டு அதன் முட்டைகளைக் க்பளீகரம் செய்ய ஆரம்பிப்பேன்.

பட்டு: சத்தான உணவாயிற்றே! உண்டு கொழுத்துச் சீக்கிரமே அடுத்த நிலைக்கு வந்துவிடுவாயாக்கும்?

வண்டு: ஆமாம்... வெட்டுக்கிளிதான் இப்படி என் அருகில் வரவேண்டும் என்பதில்லை. தேனீக்கள் வந்தாலும் அதன் கால்களில் ஒட்டிக் கொண்டு தேன் கூட்டுக்குள் புகுந்து விடுவேன். அங்கு தேனீக்களின் புழுக்களோடு (லார்வா). தேனையும் உண்டு கொழுத்து வளர்ந்து வெளிவருவேன்.

பட்டு: பலே வண்டுதான் நீ! பூச்சி இனத்துத் தாயார்கள் எல்லாம் முட்டையிலிருந்து புழுக்கள் வெளிவந்ததும் அதற்கான ஆகாரம் எதுவோ அதன் அருகில் தங்கள் முட்டைகளை இடும் என்று படித்திருக்கிறேன்.... ஆனால்.....

வண்டு: ஆனால் பிளிஸ்டர் பீட்டிலான எங்கள் தாயார் மட்டும் இப்படி முட்டையிடுவதில்லை.


பட்டு: ஓ, அப்படியா? அதிசயமான வண்டுதான் நீ!

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



சமையலுக்குப்
பெருந்துணை
ஒய்வில்லா தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய
சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு
இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!......
பிரவுன் & போல்ஸன்
வெரய்ட்டி
கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை
வகைகள்! குடும்பத்-
தினரை மகிழ்விக்க
புடிங், பாயசம், ரபடி
ஆகிய பல்வேறு
இன்சுவையுள்ள
பண்டங்கள் தயாரிக்க
சாலச் சிறந்தது.
Brown & Polson
Cornflour
பிரவுன் & போல்ஸன்
கார்ன் ஃப்ளவர்
கபாப், சமோசா,
பட்டீஸ் ஆகியவற்றை
அதிமெல்லியதாகவும்
மொரமொரப்பாகவும்
ஆக்குகின்றது. குழைவான
சுவைமிகு சூப், கிரேவி
ஆகியவற்றைக்
கெட்டியாகத்
தயாரிக்க உதவுகிறது.
Brown & Polson
REX
BAKING POWDER
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து,
பக்கோடா, பூரி,
குலாப் ஜாமூன் ஆகிய-
வற்றை சுவைபட
அதிமென்மையாகத்
தயாரிக்க உதவுகிறது.
சிறிதளவே சிறப்பாகச்
செய்து முடிக்கிறது!
உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க
உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள்
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு
பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா)
பிரைவேட் லிட்.
ஸ்ரீனிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க்,
பம்பாய் 400 001.

OBM 3886 TM


ராசுவும் வாசுவும் கடத்தப்பட்ட கதை !
"அடடா, கொள்ளை போகுதே ஐயோ நம் நகைக் கடை தடுபா இந்தக் கேடிகளை."
"பொடியன்கள்...பிடி, பிடி போகவிடக் கூடாது போலீசுக்கு அறிவிக்க."
காருக்குள்ளே அடைபட்டுக் கடத்தப்பட்டனர் வெகுதூரம்.
குட்டி வீரர்களை இழுத்துப்போய் குடிசைக்குள்ளே பூட்டிவிட்டார்.
"நொந்திட வேண்டாம், இரு ராசு. வந்துவிடும் பார் போலீசு."
"சுவையான வழியினிலே சுவடு காட்டிவிட்டேன், சுகமாகச் சுவைப்போம்."
"பாதுகாத்தது பழரச பாப்பின்ஸ், பாதைநெடுக வாரியிறைத்தேன்."